தருக்கசங்கிரகம்

மூலமும் உரையும்

யாழ்ப்பாணம் நல்லூர்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்

பரிசோதித்தன

ஆறுமுகநாவலர் வி. அச்சகம்

ஆசாரித் தெரு சென்னை 1

விலை 60 ந.பை.

கணபதி துணை

திருவாவடுதுறைச் சிவஞானசுவாமிகள்
மொழிபெயர்த்தருளிய

தருக்கசங்கிரகமும்

அதனுரையாகிய

தருக்கசங்கிரகதீபிகையும்

இராமநாதபுர சமஸ்தானம்
ம-ள-ள-ஸ்ரீ பொன்னுச்சாமித்தேவரவர்கள்
வேண்டுகோளின்படி

யாழ்ப்பாணம் நல்லூர்
ஸ்ரீ ஆறுமுக நாவலர்
பரிசோதித்தது

ஆறுமுக நாவலர் வி. அச்சகம்
300 தங்கசாலை வீதி :: சென்னை

7ஆம் பதிப்பு
பராபவஷு மாசிமீ
March 1967

திருப்பெருந்திரு
ஆறுமுக நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை
நற்பொறுப்பாளர்
தி. க. இராசேசுவரன், B. A.
பதிப்பித்தன

வரலாறு

வைதிகசாத்திரம் மீமாஞ்சை, நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், வேதாந்தம் என ஆறும். அவற்றுள், மீமாஞ்சை சைமினிமுனிவரானும், நியாயம் கௌதமமுனிவரானும், வைசேடிகம் கணுதமுனிவரானும், சாங்கியம் கபிலமுனிவரானும், யோகம் பதஞ்சலிமுனிவரானும், வேதாந்தம் வியாசமுனிவரானும், சூத்திரரூபமாகச் செய்யப்பட்டன. அவை தரிசனமெனவும் பெயர்பெறும். கௌதமமுனிவர் அக்கபாதர் எனவும் பெயர்பெறுவர்.

அவற்றுள், நியாயம் வைசேடிகம் என்னும் இரண்டும் தருக்கநூலெனப்படும். இவற்றையும் இவற்றின் வழிநூல்களையும் வியாக்கியானங்களையும் நன்குணர்ந்த மகாபண்டிதராகிய அன்னம்பட்டர் ஏறக்குறைய இருநூற்றிருபது வருடத்துக்குமுன் தருக்கசங்கிரகம் எனப் பெயரிய ஒரு நூலும், அதற்குத் தருக்கசங்கிரகதீபிகை எனப் பெயரிய ஒரு வியாக்கியானமும் இயற்றினர். இவ்வன்னம்பட்டர் தெலுங்கர். இவர் மாபாடியத்துக்குக் கையடர் இயற்றிய வியாக்கியானத்துக்கு உரையுஞ் செய்தனர்.

இத்தருக்கசங்கிரகம் சிறுவரும் எளிதினுணரும் பொருட்டு மிகச் சுருக்கிச் செய்யப்பட்டமையால், யாண்டும் தருக்க நூல் கற்கப் புகுவோர் யாவரும் முன்னர் இதனையே கற்கின்றனர். இதற்குப் பல வியாக்கியானங்கள் உள. அவற்றுள்,—

1. தருக்கசங்கிரகதீபிகை. இது நூலாசிரியராலே செய்யப்பட்டது. இதனை அன்னம்பட்டீயமென வழங்குவர். இது தருக்கசங்கிரகத்துக்குச் செய்யப்பட்ட வியாக்கியானங்கள் எல்லாவற்றுள்ளும் மிக அரிதிலுணர்தற்பாலது. இது முந்நூற்றைம்பது கிரந்தமுடைத்து. இவ்வியாக்கியானத்துக்கு ஐந்து வியாக்கியானங்கள் உள அவற்றுள்,—

1. அநுமதீயம். இது மாத்துவராகிய அநுமதாசாரியராலே செய்யப்பட்டது. இவர் கர்ணாடர். சற்றேறக்குறைய நூற்றுப்பத்து வருடத்துக்குமுன் தேகவியோக மெய்தினர். இவ்வநுமதீயம் ஆறாயிரங் கிரந்தமுடைத்து.

2. நீலகண்டீயம். இது பல்லாரியில் இருந்த தெலுங்கராகிய நீலகண்டசாத்திரியாராலே செய்யப்பட்டது. இவர் ஏறக்குறைய நாற்பது வருடத்துக்குமுன் காசியிலே தேகவியோகமெய்தினர். இந்நீலகண்டீயம் ஆயிரத்திருநூற்றைம்பது கிரந்தமுடைத்து. இதற்குத் தெலுங்கராகிய இராமபத்திரபட்டராலே இராமபத்திரீயம் என ஒரு வியாக்கியானம் செய்யப்பட்டது.

3. தருக்கசங்கிரகத்துக்கு நிருத்தி செய்த பட்டாபிராம சாத்திரியாரும் தருக்கசங்கிரகதீபிகைக்கு ஒரு வியாக்கியானம் செய்தனர்.

4. முகுந்தபட்டீயம். இது முகுந்தபட்டராலே செய்யப்பட்டது.

5. தீபிகாப்பிரகாசிகை. இது தமிழ்நாட்டில் இருந்த தெலுங்கராகிய நரசிங்கசாத்திரியாராலே செய்யப்பட்டது. இவர் சித்தாந்த முத்தாவலிக்குப் பிரபை எனப் பெயரிய ஒரு வியாக்கியானம் செய்தனர். இவர் ஏறக்குறைய ஐம்பது வருடத்துக்கு முன்னே தேகவியோக மெய்தினர். பிரகாசிகை ஆறாயிரங் கிரந்தமுடைத்து.

2. நியாயபோதினி. இது கௌடரும் தருக்கபாடாப் பிரகாசஞ் செய்தவருமாகிய கோவர்த்தன மிசிரராலே செய்யப்பட்டது. இது நானூறு கிரந்த முடைத்து.

3. நிருத்தி. இது தமிழ்நாட்டில் இருந்த தெலுங்கராகிய பட்டாபிராம சாத்திரியாராலே தமது புத்திரியின் பொருட்டுச் செய்யப்பட்டது. தருக்கசங்கிரகத்துக்குள்ள வியாக்கியானங்கள் எல்லாவற்றுள்ளும் இது மிக எளிதினுணர்தற்பாலது. இவர் ஏறக்குறைய நாற்பது வருடத்துக்கு முன்னே தேகவியோக மெய்தினர். இந்நிருத்தி அறுநூறு கிரந்தமுடைத்து.

4. சித்தாந்த சந்திரோதயம். இது கிருஷ்ண தூர்ச்சடிதீக்ஷிதராலே செய்யப்பட்டது. தருக்கசங்கிரகத்துக்குரிய வியாக்கியானங்களுள் தருக்கசங்கிரகதீபிகையொழித் தொழிந்த மற்றெல்லாவற்றினும் இது மிக அரிதினுணர்தற்பாலது. இது ஆயிரத்துமுந்நூறு கிரந்தமுடைத்து.

5. தருக்கசங்கிரக சந்திரிகை. இது மகாராட்டிரராகிய முகுந்தபட்டராலே செய்யப்பட்டது. இது ஆயிரத்திருநூறு கிரந்தமுடைத்து.

6. பதகிருத்தியம். இது கௌட க்ஷத்திரியராகிய சந்திரச் சிங்கராலே செய்யப்பட்டது. இது கங்கைக் கரையிலுள்ள நாடுகளிலே கற்கப்படுகின்றது. இது ஆயிரங் கிரந்தமுடைத்து.

7. தருக்கசங்கிரகோபநியாசம். இது மகாராட்டிர சந்நியாசியாகிய மேருசாத்திரியாராலே செய்யப்பட்டது.

இது தார்க்கிகர்களாலே மிக நன்கு மதிக்கப்படுகின்றது. இது ஐஞ்ஞூறு கிரந்தமுடைத்து.

தருக்கசங்கிரகமும், தருக்கசங்கிரகதீபிகை என்னும் வியாக்கியானமும், கைலாசபரம்பரைத் திருவாவடுதுறைச் சித்தாந்தபானுவாகிய நமச்சிவாயமூர்த்திகண் மரபில் சிவஞான சுவாமிகளாலே, தமிழின் மொழிபெயர்த்தருளப்பட்டன.



உ

கணபதி துணை

சிறப்புப்பாயிரம்

மகாவித்துவானாகிய

ம-ா-ா-ஸ்ரீ திரிசிரபுரம்

மீனாக்ஷிசுந்தரப்பிள்ளை

இயற்றியது

தரவுகொச்சகக்கலிப்பா

பூமணக்கும் பொழின்மணக்கும் பொழிற்கெழில்கூர் தருமுகமாய்த், தூமணக்கு மொருபொருளைத் துறைப்புனல்பாய் வளத்ததுவாய், நாமணக்கும் புகழ்படைத்து நலமணக்கும் புலமணக்குந், தேமணக்குந் தமிழ்மணக்குந் தென்பாண்டித் திருநாட்டில். 1

மருந்துநிகர் மொழிமடவார் மைந்தரொடு மாட்டயரப்
பொருந்துவளம் பலசெறியும் பூஞ்சோலைபுடை யுடைத்தாய்ப்
பருந்துதிசான் றென்றுமொளிர் பாவநாசப்பதிப்பாற்
றிருந்துபுகழ் விக்கிரமசிங்கபுர மெனும்பதியில். 2

பொன்பூத்த பெருஞ்சிகரப் பொதியவரை நிதியமெனுங்
கொன்பூத்த நெடியகுணக் குறியமுனி யருள்புலமை
முன்பூத்த வேழுதலை முறைவாய்ந்த முழுத்தவத்து
மின்பூத்த புகழ்ப்பாண்டி வேளாள குலதிலகர். 3

அணிதருமம் பலக்கூத்த ரவர்மனையார் வடமீனும்
பணிதருகற் புடையநலம் பரவுமயி லம்மையார்
துணிதருமற் றிவர்தம்பாற் றூவறிவங் குரித்தென்னத்
திணிதருமெய் திருந்தொருவர் திருவருளா லவதரித்தார்.

முக்களா லிங்கமென மொழிபிள்ளைத் திருநாம
நக்களா வுறப்பூண்டு நந்துபிறைக் கொழுந்தனையா
ரக்களா வரனருளா லையாண்டின் மேனெடிதின்
பக்களா தரத்தோதும் பள்ளியமர்ந் தருளினார். 5

பள்ளியமர்ந் தருணாளிற் பரவுபுனற் சோணாட்டு
வள்ளியவா வடுதுறையில் வாழ்நமச்சி வாயகுரு
வொள்ளியமென் மலர்க்கழலே யுளத்துன்னு முனிவர்சிலர்
நள்ளியவான் புகழ்மிகுமந் நகர்வீதி வரக்கண்டார். 6

கண்டுபணிந் தெழுந்தடிகேள் கடையேனி லடைந்தமுது
கொண்டுபின ரெழுந்தருள வேண்டுமெனக் குறையிரப்ப
மண்டுபிரி யத்தவரு மழவுருவப் பெருந்தகையார்
தொண்டுபடற் கிரங்கியவர் தூயமொழிக் குடன்பட்டார். 7

திருந்துசுவைக் கறியமுதுந் திருவமுதுங் கொண்டருளி
யருந்தியென் னம்மையென்றோ ரழகியசெய் யுளும்பாடிப்
பொருந்துமவர் செலப்புறத்தே போயிருந்த தந்தையார்
வருந்துதலி றம்மனைவாய் வந்துநிகழ்ந் ததையுணர்ந்தார். 8

உணர்ந்தவுடன் மைந்தரொடு முறுவர்பாற் போய்வணங்கிப்
புணர்ந்ததிரு வருட்பெருமைப் புத்திரனார் குறிப்புணர்ந்து
தணந்தனர்சென் றனரீன்ற தந்தையா ரம்மைந்தர்
மணந்தனராய் முனிவரொடு வழிக்கொண்டு நடந்தனரால். 9

வரையகமுங் கருங்கான மருவகமும் வயன்மருதத்
தரையகமு மெம்பெருமான் றானங்கள் பலவணங்கி
விரையமைந்த சோணாட்டு மிளிர்திருவா வடுதுறையி
லுரையமைந்த திருமடத்தி னுட்புகுந்தாரு வமையிலார். 10

புக்கவர்பன் னிரண்டகவை பொருந்தியொளி ரஞ்ஞான்றே
தக்கவராய் முண்டிதராய்ச் சந்நியா சத்திறம்பூண்
டுக்கவர்தந் தலைமாலை யொருங்கணிவார் திருவருளாற்
றிக்கவரு ளதிசயிப்பச் செழுங்கலைகள் பலபயின்றார். 11

ஆயபெரும் புகழ்த்திருச்சிற் றம்பலதே சிகர்நாண்முன்
மேயபெருங் கருணையுரு வேலப்ப தேசிகர்தாம்
பாயநிரு வாணமெனப் பகர்தீக்கை செயப்பெற்றுத்
தாயனையார் சிவஞான முனிவரெனத் தனியமர்ந்தார். 12

வடகலையிற் றென்கலையின் மாறிலா விலக்கியமுந்
தொடர்புடைய விலக்கணமுந் தோலாத தருக்கமுமற்
றிடனுடைமெய்ப் பொருட்கலையு மெக்கலையு முழுதுணர்ந்து
திடமுடைய வநுபூதிச் செல்வராய்ச் சிறப்புற்றார். 13

சிறப்புறுதொல் காப்பியச்சூத் திரவிருத்தி முதற்பலவு
மறப்பில்பெரும் புகழ்க்காஞ்சி மான்மியமும் யமகமுதற்
பெறப்படுமந் தாதிகளும் பிறங்குமிவை முதற்பலவு
முறப்பயில வினிதியற்றி யுயர்பரிபூ ரணமுற்றார். 14

அனையரியற் றியநூலு ளாய்ந்துணர மொழிபெயர்த்த
தனைநிகரும் பொருட்டருக்க சங்கிரக மெனுநூலும்
புனையுமத னுரையன்னம் பட்டியமும் புரிந்தாய்ந்து
பனைமடனின் றெடுத்தச்சிற் பதிப்பித்துத் தருகவென. 15

எஞ்சாத வளப்பொழில்வா யினியமாங் கனித்தேனு
மஞ்சாருந் தலைவருக்கை வண்கனிகீண் டிழிதேனு
மஞ்சாத புலியடிக்காய்க் குலைகனிந்தாங் கிழிதேனுஞ்
செஞ்சாலிப் பயிர்வளர்த்துத் திகழ்செம்பி நாடுடையான். 16

திருந்துபசும் பொன்செய்து செம்மணிகால் யாத்தமுத
மருந்துசுர ரழுக்கறுப்ப வடுக்கியமா ளிகைமேலா
லிருந்துமட வார்மைந்த ரிருந்தருவின் கனிபறித்துப்
பொருந்துசுவை யுணர்ந்துவக்கும் புகழ்ப்புதுவை மாநகரான். 17

தீட்டியவாள் பொருகருங்கட் செங்கனிவாய்ப் பரமாதர்
கூட்டியசாந் தணிந்தமுலைக் குடங்கலவா முன்பாலா
னீட்டியபல் படையொடும்போ ரெதிர்த்தமரு வலர்முகத்துக்
காட்டியசெந் தீயனைய கண்கலவாப் பின்பாலான். 18

பூங்காவிக் குடையாது பொலிதருகட் படைகூட்டு
நீங்காவிக் குடைமதவே ணெஞ்சமரும் வனப்புடையான்
வீங்காவிக் குடையுணவு மேன்மேலு மளித்துவப்போ
னுங்காவிக் குடையினொடு மக்காவிக் கொடியுடையான். 19

சென்றுகாண் பவர்மகிழ்ச்சி திளைக்கவருந் திருமுகத்தா
னின்றுதாழ் பவர்க்கருளே நெடிதுபொழி தருகண்ணான்
குன்றுநேர் தருபுயத்தான் குறுகலர்தம் மணிமுடிக
டுன்றுவான் கழல்புனைந்து துவைத்துழக்குஞ் சுடர்க்கழலான். 20

சிவஞான தேவர்நனி செய்தபெருந் தவத்துதித்தோன்
பவஞான முழுதொழியப் பன்னூலும் பயின்றுணர்ந்தோன்
றவஞான மிகுபொன்னுச் சாமிநரேந் திரன்கேட்ப
வவஞான மறுத்தவ்வா ரூக்குவித்தா னத்தகையோன். 21

இனையனென வியம்பிடுவா மெழில்வளர்கே தீச்சரமு
நினையவினி தேமருவ நிரப்புகோ ணசலமும்
வினையறைசெய் தொளிரீழ மேவுதிரு நல்லூர்வாழ்
தனையனையான் கந்தவே டவத்துதித்த குணசீலன். 22

அகத்தியந்தொல் காப்பியமுன் னையபல விலக்கணமுஞ்
சகத்தியல்பல் விலக்கியமுஞ் சாற்றுபர மதநூலு
மகத்துவமெய்ப் பொருணூலு மதியமையப் பயின்றுணர்ந்து
சுகத்தியலு மநுபூதித் தோன்றலா யமர்பெரியோன். 23

மாறுபடு பரசமய வழியனைத்து மறமாற்றி
யாறுபடு செஞ்சடிலத் தண்ணலா ரருணெறியே
தேறுபடும் படிவளர்த்துத் திகழுமா தவமுடையோன்
வீறுபடு சிவனடியார் மேன்மைமுழு மையுமுணர்ந்தோன். 24

கருள்விரவு தலைக்கழிக்குங் கண்மணியும் வெண்ணீறும் ன்
பொருள்விரவு மைந்தெழுத்தும் பொருளாகக் கொண்டுவப்போ
றெருள்விரவு சுத்தசைவ சித்தாந்தப் பெருஞ்செல்வ
னருள்விரவு பரவுபுக ழாறுமுக நாவலனே. 25

திரிசிரபுரம்

சிதம்பரச்செட்டியார் குமாரர்

தியாகராசச்செட்டியார்

இயற்றியது

நேரிசையாசிரியப்பா

மணிவளர் நெடுங்கடல் வயிறுறத் தேக்கிய
வணிவளர் கருமுகி லளைந் துபுறங் கிடப்பப்
பசுங்கழை யுயிர்த்த வெண்கதிர் மணிகளை
நெடுங்கரிச் சமருகு கொடுங்கவின் மருப்பொடு
சுடர்விடு செம்பொற் றடமுடி தாங்கிக்
கடங்கலுழ் கரடக் களிற்றுரி போர்த்து
வரமா மறைகமழ் சிரமா லிகையொடு
குனித்தவுடல் காட்டும் புனிற்றிளந் திங்கள்
புரிசடை முடியணி புராதன னேய்ப்ப
விளங்குறு சையமால் வெற்பினின் றிழிந்து
மணியும் பொன்னு மயிற்றழைப் பீலியுந்
திணிவள ராரத் துணியோ டகிலுந்
திரைக்கரத் தேந்திக் கரைப்புறத் தெறியா
வளவறப் பெருகி யருளெனக் குளிர்ந்து
புறநூ லுணர்ந்தோ ரறிவெனக் கலங்கி
முப்பொரு ளுண்மை மொழிதரு சைவத்
தெய்வநூ லுணர்ந்தோர் சிந்தையெனத் தெளிந்து
வந்துமூழ் குநர்க்கக மாசுங் கழுவிப்
பொன்னிவளஞ் சுரக்குஞ் சென்னிநன் னாட்டுண்
முழுமலந் துமிக்குங் கழுமல மாதவங்
காட்டவந் துதித்த கவுணியர் குலமணிக்
கம்பொற் கிழியருள் செம்பொற் றியாக
ரடியவ ருளமெனக் குடிகொண் டமருந்
திருவா வடுதுறை யெனுந்திருப் பதியி

லருளுருத் தாங்கித் தெருளடி யாருற
வாழ்தரு நமச்சி வாயகுரு சாமி
மலரடிக் கமல மலர்தரு முளத்தினன்
பெண்ணைசூழ் தருதிரு வெண்ணெய்நல் லூரே
திருப்படை வீடாத் திருந்தவெழுந் தருளிய
பொய்கண் டகன்ற மெய்கண்ட தேவ
நாயனார் திருவரு ணலத்திரு வாக்கான்
மொழிபெயர்த் தருளிய முதனூ லாய
சிவஞான போத மெனுந்திரு நூற்குமா
பாடியஞ் செய்தருள் பீடமர் பெரியன்
மேருவரை குழைத்திம வெற்பிறை மாமக
டழுவக் குழைந்த தம்பிரா னுறையு
மருக்காஞ்சி சேர்பொழின் மருதஞ் சூழ்ந்த
திருக்காஞ்சி மான்மியந் தீஞ்சுவை மதுர
நனியூற் றெடுக்கு மினியசெந் தமிழி
னன்குநவின் றருளிய நாவலர் பெருமான்
புண்ணிய நீறு மெண்ணுமைந் தெழுத்துங்
கண்ணுறு தெய்வக் கண்டிகை யும்மே
பொருளெனக் கொண்டு மருளறுத் துயர்ந்தோன்
றவஞானம் பழுத்த சிவஞான முனிவரன்
கூரிய வுணர்விற் கோருறை யிடமெனத்
தந்தரு ளுந்தமிழ்த் தருக்கசங் கிரகமு
மன்னம் பட்டிய மென்னுமத னுரையும்
பார்புக ழச்சிற் பதித்துத் தருகென
நறைமலர் செறிந்த நிறைபுனல் வாவியிற்
பவளச் சரோருகப் பனிமலர் நாப்பட்
டவளவெண் ணிலவுகால் சலஞ்சல மமர்தன்
மதரரி நெடுங்கட் கதிர்முலை மடவார்
குனிகவி னுதலையுங் குளிர்வத னத்தையுங்
குறைதரு ஞான்றிலு நிறைதரு ஞான்றினு
மொவ்வாப் பெருங்குறை செவ்விதி னிரப்ப
வழனடுப் புகூஉ வவிர்மதிக் கடவுள்
செய்தவ நிகர்க்குஞ் செம்பிநன் னாடன்
மறைமுழு துணர்ந்த மாதவர் செங்கையி
னிதியுட னொழுக்கு நெடும்புனல் பெருகிக்
கலைந்தெறி சந்தனக் கலவையோ டளாவி

வண்டலிட் டோடு மணிமறு கதனிடை
விண்ணுறு நிவந்த மேனிலை மாடத்
தரமியத் தலத்தி லாடுறு மந்நலார்
தடமுலைக் கொதுங்கி யிடுகிடை நோக்கி
யன்புறு மாடவர் துன்புற் றிரங்கி
யழகினை மறைப்ப தன்றிப் புரிவ
தொன்றுமின் றேனு முறுதுய ரிவையும்
புரிவவென் றுணர்ந்து பொற்கயி லவிழ்த்தெறி
செம்பொற் கலனுஞ் செழுமணிக் கோவையும்
பம்பின கிடந்து படர்பவர் யாரு
மிழுக்கா வண்ண மிருதாள் வைத்து
நடந்திட வுதவி நன்கு புரிந்து
புதையிருள் விழுங்கும் புதுவைமா நகரான்
கண்ணிய மாசிவ புண்ணியங் கனியுந்
திண்ணிய நடைசேர் சிவஞான தேவன்
பண்ணிய மாதவப் பயோததி தனக்கொரு
மறுவறு மதியென வந்தவ தரித்தோன்
பொருவிலாப் புகழ்க்கொரு புகலிட மானோ
னொருங்குல குதித்த வுயிரெலாம் புரக்கும்
பெருங் கருணைக்கோர் பிறப்பிட மானோ
னோயாப் பெரும்பய னுலவா துதவு
மாயா வாய்மையைத் தாயாய் வளர்ப்போ
னடையிலா வறிஞர் நல்குர வொழிக்குந்
தடையிலாக் கொடைக்கோர் தந்தை யானோன்
சொல்லரு நாயனா ரெல்லுற வகுத்த
பல்லறங் கட்குமோர் நல்லணி யானோ
னலமலிந் தறிவினை நன்றுற வளர்க்கும்
பலகலை கட்கொரு பண்டார மானோ
னாமகள் வசிக்கவெண் ணளின மானோன்
பூமக ணடிக்கவோர் பொன்னரங் கானோ
னினையினும் புகலினு நீள்செவி மடுப்பினும்
புனைசெழுந் தேனினும் புரையறு கண்டினும்
புத்தமு தத்தினுந் தித்திக் குந்தமிழ்
மாணமர் கவிகள் வழுத்தும் பெருங்கவி
வாணர்க் கொருபெரு வள்ள லானோன்
முத்திப் பொருளா மத்தி யுரித்தோன்

பத்திக் கொருதனி வித்து மானோன்
புகரிலா வுணர்ச்சிப் புலமையோ ரளகை
நிகரிலாக் குபேரனிந் நிகழுரு வாகித்
தன்னிதிக் கிழவ னென்னும் பெயரை
மயலறுத் துணர்வா னியலுறத் திரித்துப்
பொன்னுச் சாமிப் பேர்பூண் டனனெனும்
பொன்னுச் சாமிவேள் புகன்றன னாக
நெடுங்கடற் றோன்றுந் தடந்திரை வீசுறு
மதிநல மழியக் கதிர்விடு தரளமுஞ்
செங்கதிர் மழுங்கப் பொங்குசெம் மணியும்
வடவையுண் ணாணச் சுடர்விடு பவளமுந்
தென்னுற மின்னும் பொன்னும் பூண்டு
வெண்ணுரைத் துகில்புனை வண்ணயாழ்ப் பாண
மென்னுங் கன்னிக் கெழின்முக மாயது
மன்னுறு வளனெலாந் தன்னுறு நாமஞ்
சொல்லி விளக்கு நல்லூ ரென்ப
வத்திரு முகத்திற் கழகுநனி பயப்ப
வெழுதிய திலக மென்னவந் துதித்தோன்
றென்மொழி யென்னு மன்பெரும் பௌவ
மொருங்கு குடித்த பெருங்கும்ப முனிவ
னொல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியமுத
லிலக்கண மெல்லா நலக்கவைத் தடுக்கிய
திருவ நீண்ட வொருபெரும் பேழை
யாரணம் புகலும் பூரண புராணனை
பொருளெனப் புகலும் புராண வாகரஞ்
சொல்பல சமயமாந் துகளற வடித்துச்
சமயா தீதமாஞ் சைவசித் தாந்தத்
தெய்வவா ரமுதம் பெய்து நிறைத்துப்
பொருவற வைத்த பூரண கும்பம்
பேறுபெரி தடைந்த வாறுமுக நாவல
னுவகையுளந் துளும்பத் தவநனித் தாய்ந்து
வீங்குபே ரறிஞர் வியப்பப்
பாங்குற வினிது பதிப்பித் தனனே.

உ

கணபதி துணை

தருக்கசங்கிரக மூலமும்

தருக்கதீபிகை என்னும் உரையும்

தற்சிறப்புப்பாயிரம்

மன்றவாணனைமனத்திடைநிறுவிவண்டுறைசை
வென்றசீர்நமச்சிவாயமெய்க்குரவனைவணங்கி
யென்றனைப்பொருளுமிளையவர்க்கினிதுணர்வுதிப்பத்
தென்றமிழ்ச்சொலாற்செயப்படுந்தருக்கசங்கிரகம்.

மலைமகண் மணந்த வுலகினுக் கிறையவன்
கலைமக ளாசான் கான்மலர் வணங்கிக்
கிளர்பொருட் டருக்கசங் கிரக
மிளையோ ருளங்கொள வியம்புவ னுரையே.

எடுத்துக்கொண்ட நூல் இடையூறின்றி இனிது முடிதற் பொருட்டுச் செயற்பாலதென ஆன்றோரொழுக்கத்தான் அனுமிக்கப்படும் சுருதியின் விதிக்கப்பட்ட வழிபடுகடவுள் வணக்கமாகிய மங்கலம் மாணாக்கர்க்கு அறிவுறுத்தற்பொருட்டு யாப்பினால் யாத்து, அதனான் முடிபெய்தும் பொருள் உணர்த்துகின்றார். அற்றாக, மங்கலம் இனிது முடிதற்குக் காரணமன்று, மங்கலங் கூறியவழியும் நன்னூல் முதலியவற்றின் முடிவு காணாமையின், மங்கலங் கூறாதவழியும் தொல்காப்பியமுதலியவற்றின் முடிவு காண்டலின், உடன்பாட்டினும் எதிர்மறையினும் நியமந்தப்புதலின் எனின்;—நன்று சொன்னாய்; நன்னூல் முதலியவற்றின் இடையூற்றின் மிகுதிப்பாட்டான் முடிவுபேறின்று, தொல்காப்பிய முதலியவற்றின் நூற்குப் புறமாகவே மங்கலஞ் செய்யப்பட்டதாகலின், நியமந்தப்பியது யாண்டையதென்க.

அற்றேல், மங்கலம் செயற்பாலதென்பதற்குப் பிரமாணம் என்னையெனின்:- ஆன்றோரொழுக்கத்தான் உண்டென்று அனுமிக்கப்படுஞ் சுருதியே பிரமாணமென்க. ஈண்டனுமானமாமாறு,—'மங்கலம் செயற்பாலதென வேதத்தின் விதிக்கப்பட்டது, உலகநடையும் பழிப்புமல்லாத ஆன்றோரொழுக்கமாதலின், வேள்விமுதலியனபோல' எனக்காண்க. உண்டி முதலியவற்றிற் சேறலை நீக்குதற்கு 'உலகநடையல்லாத' என்றும், இரவின்கட்டென்புலத்தார்கட ணோம்பல் முதலியவற்றிற் சேறலை நீக்குதற்குப் 'பழிப்பல்லாத' என்றும், கூறப்பட்டது. பயனில செய்யற்கவென, நீரடித்தல் துரும்பு கிள்ளுதல் முதலியவையும், பழிக்கப்படுதலின், 'உலகநடையும் பழிப்புமல்லாத ஒழுக்கம்' எனவே அமைதலின், 'ஆன்றோர்' என்றது விளங்குதற் பொருட்டு. 'ஒழுக்கம்' ஆசரித்து வருதல்.

இதன்பொருள் வெளிப்படை. 'நிறுவுதல்' நிலைபெறுத்துதல். 'வென்ற' மேம்பட்ட. இளையோராவார் கோடலும் உள்ளத்தமைத்தலும் வல்லுநர், குழவிப்பருவத்தரல்லரென்பதாம். 'இனிதுதித்தல்' வருத்தமின்றியுதித்தல். 'உணர்வு' பதார்த்த ஞானம். 'தருக்கம்' தருக்கித்துத் தெரிக்கப்பட்டன; அவை திரவிய முதலிய பதார்த்தங்கள். 'சங்கிரகம்' அவற்றைச் சுருக்கிக் கூறுதல். தருக்கநூல்கள் பலவுண்மையின் ஈண்டுப் புதிதாகத் தருக்கநூல் கூறுவதெற்றுக்கென்னும் ஆசங்கை நீக்குதற்கு, அந்நூல்கள் விரிவுடைமையின், அவை அறிவான் முதிர்ந்தோர்க்கேயா மென்பார் இஃது 'இளையவர்க்கு' என்றும், இந்நூற் பயன் கூறுவார் 'இனிதுணர்வுதிப்ப' என்றுங் கூறினார்.

பதார்த்தம்

1. **திரவியம், குணம், கருமம், சாமானியம், விசேடம், சமவாயம், அபாவம் எனப் பதார்த்தங்கள் ஏழு.**

திரவியம்-பொருள். குணம்-பண்பு. கருமம்-தொழில். சாமானியம்-பொதுமை. விசேடம்-சிறப்பு. சமவாயம்-ஒற்றுமை, சம்பந்தம். அபாவம்-இன்மை.

திரவியம், குணம் எ-து. பதார்த்தங்களைப் பகுக்கின்றது. பதப்பொருள் பதத்துக்குப் பொருளென விரிதலின், பதத்தாற் பெயரிட்டு வழங்கற்பாலதாந் தன்மை பதார்த்தத்துக்குப் பொதுவிலக்கணமாதல் கூறப்பட்டது. அற்றேல் அஃதாக, திரவிய முதலாகப் பகுத்த செவ்வெண்ணால் ஏழென்னுந் தொகை தானே பெறப்படுதலின், ஏழென்றல் பயனில் கூற்றாமெனின் :— அற்றன்று, அது பகுத்தவற்றின்மேற் பதார்த்தமில்லை யென்னும் பொருட்டாகலின். அற்றேல், மேற்பதார்த்தம் அளவையானளக்கப்படும் பொருளாயின் விலக்குதல் கூடாது, அன்றாயிற் பிரதியோகியுணர்ச்சியின்றி அபாவவுணர்ச்சி பெறப்படாமையின் விலக்கியதனாற் பயன் என்னை யெனின்:—அற்றன்று, தொகை கொடாதொழியிற் பதார்த்தத்தன்மை திரவிய முதலிய ஏழனுள் ஒன்றன்கண் வியாப்பியமாகா தெனவும் பொருள்படுமன்றே, அது நீக்குதற்பொருட்டு ஏழெனல் வேண்டுமென்க. மேலும் இவ்வாறே காண்க. தத்தம் பாவத்திற்குத் தாந்தாம் பிரதியோகியாகிய தத்தமுணர்ச்சி பெற்றாலன்றித் தத்தமபாவவுணர்ச்சி பெறப்படா தென்பது தருக்கநூற் றுணிவு.

2. **அவற்றுள், திரவியம் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், காலம், திக்கு, ஆன்மா, மனம் என ஒன்பது வகைத்து.**

அவற்றுள், திரவியம் எ-து. திரவியத்தைப் பகுக்கின்றது. 'அவற்றுள்' என்பது திரவிய முதலிய ஏழனுளென்றவாறு. திரவியம் ஒன்பது வகைத்தெனக் கூட்டுக. 'பிருதிவி' எ-து. அவை இவை யென்கின்றது. அற்றேல், இருள் பத்தாந் திரவியமாதலுண்மையால், திரவியம் ஒன்பதென்ப தென்னை? அது திரவியமாதல், 'இருள் கருவடிவிற்று, இயங்குகின்றது' என்னும் வாதையில்லாத உணர்ச்சிவலியாற் கருமைப்பண்பிற்கும் இயங்குதற் றொழிற்கும் பற்றுக்கோடாதலுண்மையின், பெறப்பட்டது; அது, வடிவுடைமையின் ஆகாய முதலிய ஐந்தனுள்ளும், உருவுடைமையானும் இடையறா தியங்காமையானும் வாயுவினும்,

ஒளிவடிவிற் றன்மையானும் வெம்மை யின்மையானும் தேயுவினும், குளிர்ச்சி யின்மையானும் கருவடிவிற்றாகலானும் நீரினும், நாற்றமுடைய தன்மையானும் பரிச மின்மையானும் நிலத்தினும், அடங்குவதன்றாகலின், இருள் பத்தாந் திரவியமென்பது பெறப்படுமாலோ வெனின்:—அற்றன்று, இருள் வடிவுடைப் பொருளன்று, ஒளியோடுங் கூடாத விழியாற் கவரப்படுதலின் ஆலோகத்தினபாவம்போலும், வடிவுடைப்பொருள் விழியாற் கவர்தற்கு ஒளியே காரணமெனக் கருதப்படுதலின், பேரொளியுடைய தேயுப்பொதுமையின் அபாவமே இருளென்பது பெறப்படுதலினென்க. ‘இருள் ஆண்டியங்குகின்றது, கருவடிவிற்று’ என்னும் உணர்ச்சி மயக்கத்தாற் றோன்றியதேயாம்: ஆதலிற் பொருள் ஒன்பதே யென்பது பெற்றாம்.

பொருண்மைச்சாதியுடைமையாதல் குணமுடைமையாதல் பொருட்கு இலக்கணமெனக் கொள்க. இலக்கணம் அவ்வியாத்தி, அதிவியாத்தி, அசம்பவம் என்னும் முக்குற்றங்களும் நீங்கிய தன்மை. அதுவே சிறப்பியல்பென் றுரைக்கப்படும். சிறப்பு இலக்கியத் தன்மையை வரைந்துகொள்வதனோடு நியதமாய் ஒப்ப நிற்பது. பிறவற்றினின்றும் வேறுபடுப்பதே இலக்கணமெனக் கொள்ளின், வேறுபடுத்தலினும் அபிதேயத்தன்மை முதலியவற்றினும் அதிவியாத்தி நீக்குதற்கு அதன் வேறாயவென இயல்பிற்கு அடைகொடுக்கற்பாற்று. அபிதேயம் – பெயரிட்டு வழங்கற்பாலதாந் தன்மை. வழங்குவதூஉம் இலக்கணத்திற்குப் பயனாகக்கொள்ளின், அவ்வடை வேண்டாவென் றுணர்க, வேறுபடுத்தலும் வழங்குதற்பொருட்டேயாகலின் எனக் கொள்க. அவ்வியாத்தி இலக்கியத்தி னேகதேசத்தின் இலக்கணமில்லாமை: அது ‘ஆவிற்குக் கபிலநிறத்தன்மை.’ அதிவியாத்தி இலக்கியமல்லாததன்கண்ணுமிருப்பது: அது ‘ஆவிற்குக்கோடுடைமை.’ அசம்பவம் இலக்கிய முழுதினுமின்மை: அது ‘ஆவிற்கு ஒற்றைக்குளம்புடைமை’ என்க. குணமுடைமை திரவியத்திற் கிலக்கணமென்றல் பொருந்தாது. முதற்கணத்திற்றோன்றி, அழிவுபடுங் குடத்திலே அவ்வியாத்திக் குற்றம் வருமாலோவெனின் :—அற்றன்று, குணத்தோடு ஒருங்கு நிற்பதாய் உண்மைத்

தன்மையின் வேறாய சாதியுடைமை யென்பது கருத்தாகலினென்க. அற்றேல், ‘உருவமொன்று சுவையின்வேறு’ என்னும் வழக்குண்மையின், உருவமுதலியவற்றின் அதிவியாத்தி வருமாலோவெனின் ;—அற்றன்று, ஒருபொருளோடு ஒற்றித்து நிற்றலால் அதுபற்றியே அவ்வாறு வழங்குவதல்லது பண்பிற்குப் பண்புகோடல் பொருந்தாமையின்.

3. குணம் உருவம், இரதம், கந்தம், பரிசம், சங்கை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், குருத்துவம், திரவத்துவம், சிநேகம், சத்தம், புத்தி, சுகம், துக்கம், இச்சை, வெறுப்பு, முயற்சி, தர்மம், அதர்மம், வாசனை என இருபத்து நான்கு வகைத்து.

குணம். எ-து. குணங்களைப் பகுக்கின்றது. குணமாவது திரவியம் கருமம் என்னு மிரண்டற்கும் வேறாய்ப் பொதுவியல்புடையது, குணத்தன்மையாகிய சாதி யுடைய தெனினுமாம்; அற்றேல், எண்மை, மென்மை, வன்மை முதலியனவும் உண்மையின், குணம் இருபத்துநான் கென்றதென்னை யெனின் ;—அற்றன்று, திண்மையின் அபாவமே எண்மையாகலானும், அவயவக் கூட்டவிசேடமே மென்மைவன்மைகளாகலானு மென்க.

4. கருமம் எழும்பல், வீழ்தல், வளைதல், நிமிர்தல், நடத்தல் என ஐவகைத்து.

கருமம். எ-து. கருமத்தைப் பகுக்கின்றது. கருமமாவது சையோகத்தின் வேறாய்ச் சையோகத்திற்கு அசமவாயிகாரணமாயுள்ளது, கருமத்தன்மையாகிய சாதி யுடைய தெனினுமாம். சுழற்சி முதலியன நடத்தலின் அடங்குமாகலின், ஐந்தென்றல் பொருந்துமாறுணர்க.

5. சாமானியம் பரம், அபரம், என இருவகைத்து

சாமானியம். எ-து. சாமானியத்தைப் பகுக்கின்றது. மிகு

தியினிருப்பது பரசாதி. குறைவினிருப்பது அபரசாதி. சாமானியம் முதலிய நான்கினுஞ் சாதியின்று.

6 விசேடம் நித்தியப்பொருள்களினிருப்பன. அவை எண்ணிறந்தனவேயாம்.

விசேடம். எ-து. விசேடத்தைப் பகுக்கின்றது. நித்தியப்பொருள்களாவன பிருதிவி முதலிய நான்கின் பரமாணுக்களும், ஆகாயமுதலிய ஐந்துமாம்.

7. சமவாயம் ஒன்றுதானே.

சமவாயம். எ-து. சமவாயத்திற்கு வேறுபாடு இல்லையென்கின்றது.

8. அபாவம் முன்னபாவம், அழிவுபாட்டபாவம். முழுதுமபாவம், ஒன்றினொன்றபாவம் என நான்கு வகைத்து.

அபாவம். எ-து. அபாவத்தைப் பகுக்கின்றது.

1. திரவியம்

இனி இவற்றினியல்பாவன :—

9. பிருதிவியாவது நாற்றமுடையது. அது நித்தம், அநித்தம் என இருவகைத்து. நித்தம் பரமாணுரூபம்; அநித்தம் காரியரூபம். மறித்தும், சரீர இந்திரிய விடய வேறுபாட்டால் மூவகைப்படும். சரீரம் நம்மனோர்க்குள்ளது. இந்திரியம் கிராணம்; நாற்றத்தைக் கவர்வது; அது நாசிநுனியில் இருப்பது. விடயம் மண், கல் முதலியனவாம்.

பிருதிவியாவது. எ-து. உத்தேசமுறையானே முதற்கட் பிருதிவியினிலக்கணங் கூறுகின்றது. உத்தேசம் பெயர் மாத்திரையானே பொருளை எடுத்துரைத்தல். யாண்டும் உத்தேசமுறைமைக்கு இச்சையேகாரணம். நாற்றமுடைமை பிருதிவியினிலக்

கணமாயின், நறுநாற்றப்பொருளும் தீநாற்றப்பொருளுமாகிய அவயவங்களான் ஆக்கப்படுந் திரவியத்தின் ஒன்றுக்கொன்று மாறுபாட்டால் நாற்றமுண்டாகாமையின், அவ்வியாத்திக் குற்றந் தங்கும்; ஆண்டு நாற்றத்தோற்றம் பொருந்தாதென்னற்க, அவயவநாற்றம் புலப்படுதலின், அவ்விரண்டன் கூட்டத்தினாய கலப்புநாற்ற மொன்றெனக் கோடல் பொருந்தாமையின்; இன்னும், தோன்றியபொழுதே அழிவு படுங் குடத்தினும் அவ்வியாத்தி வருமாலெனின்:—அற்றன்று, நாற்றத்தோடு ஒருங்கிருக்கும் பொருண்மைக்கு அபரமான சாதியுடைமை யென்பதே கருத்தாகலின். அற்றேல், நீர் முதலியவற்றின் நாற்றம் புலப்படுதலின் அதிவியாத்தி வருமாலோவெனின்;—அற்றன்று, உடன்பாட்டானும் எதிர்மறையானும் ஆண்டுப் பிருதிவிநாற்றமே கொள்ளக் கிடத்தலின். அற்றாயினும், காலம் எல்லாவற்றிற்கும் பற்றுக்கோடாகலின் எல்லா விலக்கணங்கட்குங் காலத்தின்கண் அதிவியாத்தி வருமாலோவெனின்,—அற்றன்று, எல்லாவற்றிற்கும் பற்றுக்கோடாதற்கேதுவாய சம்பந்தத்திற்கு வேறாய சம்பந்தத்தானே இலக்கணத்திற்குரிமை கோடலின்.

அது நித்தம். எ-து. பிருதிவியைப் பகுக்கின்றது. அழிவுபாட்டபாவத்திற்கு எதிர்மறையாகாதது நித்தம். அதற்கு எதிர்மறையாவது அநித்தம்.

மறித்தும். எ-து. வேறோராற்றாற் பகுக்கின்றது. சரீரம் ஆன்மாவின் போகத்திற்கிடம். எதனால் வரைந்து கொள்ளப்பட்ட ஆன்மாவிற்குப் போகம் நிகழும், அது போகத்திற்கிடம், அதுவே சரீரமென்பதாம். போகமாவது இன்பத்துன்பங்கள் புலப்படத் தோன்றல். சத்தமல்லாத உற்பூத விசேட குணங்கட்குப் பற்றுக்கோடாகாது, ஞானத்திற்குக் காரணமாய மனக்கூட்டத்திற்குப் பற்றுக்கோடாயுள்ளது இந்திரியம். சரீரமும் இந்திரியமுமல்லாத எல்லாம் விடயமென்க. எனவே, நாற்றமுடைய சரீரம் பிருதிவிசரீரம், நாற்றமுடைய இந்திரியம் பிருதிவியிந்திரியம், நாற்றமுடைய விடயம் பிருதிவிவிடயமாதல் இலக்கணமென்பது பெற்றாம்.

சரீரம். எ-து. பிருதிவிசரீரம் இது வென்கின்றது.

இந்திரியம். எ-து. இந்திரியம் இதுவென்கின்றது. 'கிராணம்' எனப் பெயர் கூறி, 'நாற்றத்தைக் கவர்வது' எனப் பயன் கூறியவாறு. 'நாசிநுனியில்' எனப் பற்றுக்கோடு கூறியவாறு. இவ்வாறு மேலுமுய்த்துணர்க.

விடயம். எ-து. விடயம் இதுவென்கின்றது.

10. அப்புவாவது குளிர்ந்த பரிசமுடையது. அது நித்தம், அநித்தம் என இருவகைத்து. நித்தம் பரமாணுரூபம்; அநித்தம் காரியரூபம். மறித்தும், சரீர இந்திரிய விடய வேறுபாட்டால் மூவகைப்படும். சரீரம் வருணலோகத்தினுள்ளது. இந்திரியம் சிங்நுவை; சுவையைக் கவர்வது. அது நாவினுனியிலிருப்பது, விடயம் ஆறு, கடல் முதலியனவாம்.

அப்புவாவது. எ-து. அப்பிலக்கணங் கூறுகின்றது. தோன்றியபொழுதே அழிவுபடும் நீரின்கண் அவ்வியாத்தி நீக்குதற்குக் குளிர்ந்த பரிசத்தோடு ஒருங்கிருக்கும் பொருண்மைக்கு அபரமான சாதியுடைமையென்பது கருத்தாகக் கொள்க. 'தண்ணென்றது சிலாதலம்' என்புழித் தட்பந் தோன்றுதல் நீரின் சம்பந்தத்தாலாகலின், ஆண்டு அதிவியாத்தியின்மையு முணர்க. ஏனையனைத்தும் முன்னுரைத்தவா றுரைத்துக்கொள்க.

11. தேயுவாவது சுடும்பரிசமுடையது. அது நித்தம், அநித்தம் என இருவகைத்து. நித்தம் பரமாணுரூபம். அநித்தம் காரியரூபம். மறித்தும், சரீர இந்திரிய விடய வேறுபாட்டால் மூவகைப்படும். சரீரம் சூரியலோகத்துள்ளது. இந்திரியம் சக்ஷு; உருவத்தைக் கவர்வது. அது கண்ணுறை கருமணியினுனியினிருப்பது. விடயம் மண்ணினுள்ளதும், விண்ணினுள்ளதும், வயிற்றினுள்ளதும், ஆக

ரத்தினுள்ளதும் என்னும் வேறுபாட்டால் நான்குவகைத்து அவற்றுள், மண்ணினுள்ளது நெருப்பு முதலியன. விண்ணினுள்ளது மின் முதலியன. அவை நீரையே இந்தனமாகவுடையன. வயிற்றினுள்ளது உண்டவுணவு பரிணமித்தற்கு ஏதுவாயிருப்பது. ஆகரத்தினுள்ளது பொன் முதலியனவாம்.

தேயுவாவது. எ-து. தேயுவிலக்கணங் கூறுகின்றது. 'நீர் சுடுகின்றது' என்புழிச் சூடு புலப்படுதல் தேயுவின் சம்பந்தத்தாலாகலின், ஆண்டதிவியாத்தியின்மையு முணர்க.

விடயம் மண்ணினுள்ளதும். எ-து. விடயத்தைப் பகுக்கின்றது. சுவர்ணம் பிருதிவியின்கூறு, பீதத்துவமாயும் குருத்துவமாயும் இருக்கையால். அரிசனம்போலே எனின்;—அற்றன்று, எரிகின்ற தழல் கூடியவழி நெய் முதலியவற்றின் நெகிழ்ச்சிக் குணத்திற்கு அழிவு காண்டலானும், நீரினிடைநின்ற நெய்யின் கண் நெகிழ்ச்சிக்கு அழிவு காணாமையானும், தடையில்லாதவழி எரிதழலின் கூட்டங்காரணமாகப் பார்த்திவநெகிழ்ச்சிக்கு அழிவுபாடாகிய காரியம் பிறத்தல் துணியப்படுவதாம்; ஆகவே பொன்னிற்கு எரிதழல் கூடியவழியும் அழிவுபடாத நெகிழ்ச்சிக்கிடமாயிருத்தலால், பிருதிவியின் கூறென்றல் பொருந்தாமை பெற்றும். பெறவே, ஆண்டுப் பொன்மை நிறமுடைய திரவியத்தினெகிழ்ச்சி அழியாமற்றடுப்பதற்கு நெகிழ்ச்சியுடைத் திரவியம் வேறொன் றுண்டெனல் வேண்டும். வேண்டவே, அஃது ஒரு நிமித்தத்தானாய நெகிழ்ச்சிக்கிடமா யிருத்தலின் இயல்பானே நெகிழ்ச்சியுடைய நீரின்கூறென்றலும், உருவமுடைமையின் வாயு முதலியவற்றின் அடங்குமென்றலும் பொருந்தாமையின், தேயுவின் கூறுதல் பெறப்பட்டதென்க. அதன் வெம்மைப்பரிசமும் ஒளிரும் வெம்மையும் புலப்படாமை, அதனைப் பொதிந்த பிருதிவிக்கூற்றினுருவமும் பரிசமும் அவற்றைத் தடுத்தலானென்க.

12. வாயுவாவது உருவமின்றிப் பரிசமுடையது. அது நித்தம், அநித்தம் என இருவகைத்து. நித்தம் பரமாணுரூபம். அநித்தம் காரியரூபம். மறித்தும், சரீர இந்திரிய விடய வேறுபட்டால் மூவகைப்படும். சரீரம் வாயுலோகத்தினுள்ளது. இந்திரியம் துவக்கு; பரிசத்தைக் கவர்வது; அது சரீரமெங்குமிருப்பது. விடயம் மர முதலியன அசைதற்கு ஏதுவாயுள்ளது. சரீரத்தினகத்துச் சஞ்சரிக்கும் வாயுப் பிராணனெனப்படும்; அஃது ஒன்றாயினும், உபாதி வேறுபாட்டால், பிராணன், அபானன் முதலிய பெயர் பெறும்.

வாயுவாவது. எ-து. வாயுவிலக்கணங் கூறுகின்றது. ஆகாய முதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'பரிசமுடையது' என்றும், பிருதிவி முதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'உருவமின்றி' என்றும் கூறப்பட்டது.

சரீரத்தினகத்து. எ-து. பிராணன் யாண்டடங்குமென்னும் கடாவிற்கு விடை கூறுகின்றது. 'அஃது'. எ-து. பிராணனென்றே இட வேறுபட்டால் பிராணன் அபானன் முதலிய பெயர்களான், வழங்கப்படு மென்றவாறு வாயுவுண்மை பரிசத்தான் அனுமிக்கப்படும். அங்ஙன மன்றே, வளியுளருங்கால் வெப்பமுந்தட்பமுமில்லாத பரிசம் புலப்படுமன்றே; அப்பரிசம் ஒரு பொருளைப்பற்றியே நிற்கும், உருவம்போற் குணமாகலின், அதற்குப் பற்றுக்கோடு பிருதிவியென்பது பொருந்தாது புலப்பட்ட பரிசமுடைய பிருதிவியின் கூற்றிற்குப் புலப்பட்டவுருவமுடைமை நியமமாகலின், நீர் தேயுக்களுமன்று தட்பமும் வெப்பமுமின்றியிருத்தலின், வியாபகப்பொருணான்குமல்ல அவற்றுள் ஒன்றன்குணமாயின் எங்கும் புலப்படுகவெனல் வேண்டுதலின், மனமுமன்று பரமாணுவின் பரிசம் இந்திரியத்திற்குப் புலனாகாமையின், ஆதலால் அனுபவிக்கப்படும் பரிசத்திற்குப் பற்றுக்கோடி யாது அது வாயுவென் றறிக. அற்றேல், வாயு அனு

மிக்கற்பால தென்ற தென்னை? குடம்போலக் காட்சிப்பரிசத்திற்குப் பற்றுக்கோடாகலிற் காட்சிப்பொருளேயாமாலோவெனின்:—அற்றன்று, ஆண்டு உற்பூதவுருவமுடைமை உபாதியாகலின், அது திரவியமாய புறவிந்திரியக் காட்சிப்பொருளாயிருக்கும் இடமெங்கும் உற்பூதவுருவ முண்டெனச் சாத்தியத்தில் வியாபித்தலும், வாயுவாகியபக்கத்தின்கட் கூறிய ஏதுவின் வியாபியாமையும் அறிக. அற்றேல், வெந்நீரின்கண்ணதாகிய தேயுவும் காட்சிப்பொருளன்றாதல் வேண்டுமாலெனின்:— நன்றுசொன்னாய், அதுவே எமது கோட்பா டென்க. இங்ஙனங் கூறியவாற்றால், உருவமின்மையின் வாயுக் காட்சிப்பொருளன்றென்ப தறிக.

இனிக் காரியமாகிய பிருதிவி முதலிய நான்கின் றோற்றவொடுக்கமுறையாமாறு:—இறைவன் உலகைத் தோற்றுவிப்பாம் என்னும் இச்சைவயத்தாற் பரமாணுக்களிற் கிரியை உண்டாம்; அதனாற் பரமாணு விரண்டு கூடித் துவியணுகந் தோன்றும், துவியணுகம் மூன்று கூடித் திரியணுகமாம்; இவ்வாறே சதுரணுக முதலியன முறையானே தோன்றுதலின், மாபிருதிவி, மாவப்பு, மாதேயு, மாவாயுக்களாம். இவ்வாறு தோன்றிய பொருள்களை ஒடுக்குவம் என்னும் இச்சைவயத்தாற் பரமாணுக்களிரண்டின் கூட்டத்திற்கு அழிவுபாடுண்டாங்கால் துவியணுகம் அழியும், அதன் பின்னர்த் திரியணுகம் சதுரணுகமென, இவ்வாறே மாபிருதிவி முதலியன அழியுமென் றுணர்க. அசமவாயிகாரண வழிவுபாட்டால் துவியணுகம் அழியும், சமவாயிகாரணவழிவுபாட்டால் திரியணுகம் அழியுமென்பது சம்பிரதாயம். யாண்டும் அசமவாயிகாரணவழிவுபாட்டானே திரவியத்திற்கு அழிவுபா டென்பர் நவீனர்.

பரமாணுவுண்மைக்குப் பிரமாணம் என்னெனிற் கூறுதும். 'சாளரத்தினுழையும் என்றூழ்க்கதிரின்கண் மிக நுண்ணியதாகித் தோன்றுவதி யாது, அஃது அவயவத்தோடுங் கூடியது, குடம்போலக் கட்புலப்படும் பொருளாகலின், எனத் திரியணுகவுண்மை பெற்றாம். 'திரியணுகத்தின் அவயவமும் அவயவத்தோடு கூடியது, நூல்போலப் பெரிதைத் தோற்றுவிப்பதாக

லின்' என்பதனால் துவியணுகமுண்மை பெறப்பட்டது. துவியணுகத்திற்கு அவயவம் யாது அதுவே பரமாணு, நித்தமாயுள்ளது அதுவுங் காரியமெனின், வரம்பின்றியோடுமென்க. தோற்றமொடுக்கமுண்மைக்கு "புனருற்பவம் வருமா றுணர்த்துத னுதலிற்று" என்பது முதலிய சுருதியே பிரமாணம். காரியமான திரவியமெல்லாம் அழிவது அவாந்தரப்பிரளயமெனவும், காரியமான பாவபதார்த்தமெல்லாம் அழிவது மாப்பிரளயமெனவும், தெரிந்துகொள்க.

13. ஆகாயமாவது சத்தகுணமுடையது. அது ஒன்றாய், வியாபகமாய், நித்தமாய் இருக்கும்.

ஆகாயமாவது. எ-து. ஆகாயத்தினிலக்கணங் கூறுகின்றது. 'ஒன்றாய்' எ-து. ஆகாயமும் பிருதிவி முதலியனபோலப் பலவெனக் கொள்ளற்கவென்றவாறு, பலவென்றதற்குப் பிரமாணம் இன்மையினென்பதாம். 'வியாபகமாய்' எ-து ஒன்றென்றதனானே யாண்டும் நிகழ்தலின் வியாபகத்தன்மை கொள்ளற்பாற்றென்றவாறு. வியாபகமாவது வடிவுடைப்பொருளெல்லாவற்றினும் சையோகித்திருத்தல். வடிவுடைப்பொருளாதல் வரம்புப்பட்ட பரிமாணமுடைமை, தொழிலுடைமை யென்றலுமாம். 'நித்தமாய்' எ-து. வியாபகத்தன்மையானே ஆன்மாவைப் போல் நிலையுடைப்பொருளென்றவாறு.

14. காலமாவது இறப்பு முதலிய வழக்கிற்கு ஏதுவாயிருப்பது. அது ஒன்றாய், வியாபகமாய், நித்தமாய் இருக்கும்.

காலமாவது. எ-து. காலத்தினிலக்கணங் கூறுகின்றது. காலம் எல்லாவற்றிற்கும் பற்றுங்கோடாயிருப்பது, எல்லாக் காரியங்கட்கும் நிமித்தகாரணம்.

15. திக்காவது கிழக்கு முதலிய வழக்கிற்கு ஏதுவாயுள்ளது. அதுவும் ஒன்றாய், வியாபகமாய், நித்தமாய் இருக்கும்.

திக்காவது. எ-து. திக்கிலக்கணங் கூறுகின்றது. திக்கும் எல்லாக் காரியங்கட்கும் நிமித்தகாரணம்.

16. ஆன்மாவாவது ஞானத்திற்கு இடமாயுள்ளது. அது பரமான்மா, சீவான்மா என இருவகைத்து. அவற்றுள், பரமான்மா ஈசுரன், முற்றறிவன், ஒருவனே. சீவான்மா சரீரந்தோறும் வேறாய், வியாபகமாய், நித்தமாய் இருப்பன.

ஆன்மாவாவது. எ-து. ஆன்மாவிலக்கணங் கூறுகின்றது.

அது. எ-து. ஆன்மாவைப் பகுக்கின்றது.

அவற்றுள், பரமான்மா. எ-து பரமான்மாவினிலக்கணங் கூறுகின்றது. நித்தமான ஞானத்திற்கு இடமாதல் ஈசுரனிலக்கணம். அற்றேல், ஈசுரன் உண்டென்பதற்குப் பிரமாணமென்னை! அருவப்பொருளாதலாற் புறவிந்திரியக்காட்சியன்று. ஆன்மாக்களின் சுகதுக்க முதலியவற்றின் வேறாதலால் அகவிந்திரியக் காட்சியுமன்று, இலிங்கமின்மையான் அனுமானமுமன்றாலெனின் ;—அற்றன்று, 'அங்குர முதலியன கருத்தாவையுடையன, காரியமாகலின், குடம்போலும்' என்னுமனுமானம் பிரமாணமாகலானென்பது, கருத்தா உபாதானத்தைப் புலப்படக்காணும் அறிவிச்சை செயல்களையுடைய பொருள். உபாதானம் சமவாயிகாரணம். பரமாணுமுதலிய நுண்ணியபொருளெல்லாவற்றையுங் காண்டலின், ஈசுரன் முற்றறிவன்; "இறைவனாவான் ஞானமெல்லா மெல்லா முதன்மையனுக் கிரகமெலா மியல்புடையான்" என்றற்றொடக்கத் தாகமமும் பிரமாணமெனவறிக.

சீவான்மா. எ-து. சீவனிலக்கணங் கூறுகின்றது. சுகமுதலியனவுடைமை சீவான்மாவினிலக்கணம். அற்றேல், 'யான் மனிதன்' 'யான் பார்ப்பான்' என யாண்டும் யானென்னுமுணர்விற்குச் சரீரமே விடயமாகலின், சரீரமே ஆன்மாவெனிற்படுமிழுக்கென்னையெனின் ;—அற்றன்று, சரீரமே ஆன்மாவென்பார்க்குக் கை கால் முதலிய சரீரம் நசித்தலால் ஆன்மாவும்

நசித்ததெனல் வேண்டுமாகலினென்க. ஆயின் இந்திரியங்கள் ஆன்மாவென்றாமோவெனின் ;—என்றும், 'குடத்தைக் கண்டயானே இப்பொழுது குடத்தைத் தீண்டினேன்' என்னுந் தொடர்ச்சியறிவு நிகழாதொழிதல் வேண்டுதலின். ஒருவன் அனுபவித்ததனை மற்றொருவன் ஒட்டியுணர்தல் கூடாமையுணர்க. அதனால் சீவான்மா உடம்பு பொறி முதலியவற்றின் வேறெனப்படும், சுக முதலியவற்றின் வேறுபாட்டான் உடம்புதோறும் வெவ்வேறென வுணர்க. பரமாணுவெனின் உடம்புமுழுதும் வியாபித்த சுகதுக்கவனுபவங் கூடாதாகலானும், இடைப்பட்ட பரிமாண முடையதெனின் அநித்தமாதல் வேண்டும், வேண்டவே செய்த வினை அழிந்து செய்யாத வினை தோன்றிற்றெனல் வேண்டுமாகலானும், அவ்வாறன்றி நித்தமாய் வியாபகமாயுள்ளது சீவான்மா வென்றுணர்க.

17. மனமாவது சுகம் முதலிய அனுபவத்திற்குக் கருவியாகிய இந்திரியம். அதுவும் உயிர்தோறும் நியதமாயிருத்தலின் அநேகமாய், பரமாணுரூபமாய் நித்தமாயிருக்கும்.

மனமாவது. எ—து. மனத்தினிலக்கணங் கூறுகின்றது. பரிசமின்றிச் செயலுடைத்தாதல் மனத்தினிலக்கணம்.

அதுவும். எ-து. மனத்தைப் பகுக்கின்றது. ஒவ்வோரான்மாவிற்கு ஒவ்வொரு மனமாக, ஆன்மாக்கள் அநேகமாகலின் மனமும் அநேகமென்றவாறு. இடைப்பட்ட பரிமாணமெனின் அநித்தமாய் முடியுமாகலின், 'பரமாணு' எனப்பட்டது. அற்றேல், மனம் வியாபகம், பரிசமல்லாத திரவியமாகலின், ஆகாயம்போலும் எனிற்படு மிழுக்கென்னை யெனின் ;—மனம் வியாபகமாயின் ஆன்மாவிற்கும் மனத்திற்குஞ் சையோகங்கூடாமையின், ஞானமுண்டாகாதாதல் வேண்டுமென்க. வியாபகப்பொருளிரண்டற்குச் சையோகமுண்டெனின் ;—நன்று சொன்னாய், அச்சையோகம் நித்தமாகலின் உறக்கமின்றி யிருத்தல் வேண்டும், சுழுமுனைநாடியின் வேறாய இடத்து ஆன்மாவிற்கும் மனத்திற்கு

முளதாகிய சையோகம் எக்காலமும் உண்மையானென்க. அணுவாயின், 'மனஞ் சுழுமுனைநாடியின் ஒடுங்கிய காலத்துத் துயில் கூடும், ஒடுங்காத காலத்து அறிவு நிகழும்' என்பதனால் அணுவாதல் பெறப்பட்டது.

2. குணம்

18. உருவம் விழிமாத்திரத்தாற் கவரப்படுங் குணம். அதுவும் வெண்மை, கருமை, பொன்மை, செம்மை, பசுமை, புகைமை, சித்திரம் என்னும் வேறுபாட்டால் எழுவகைத்து. பிருதிவி அப்புத் தேயுக்களில் இருப்பது. அவற்றுள், பிருதிவியில் எழுவகையும் உள்ளது. நீரில் விளங்கா வெண்மை. தேயுவில் விளக்கமான வெண்மை

உருவம். எ-து. உருவகத்தினிலக்கணங் கூறுகின்றது. எண் முதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'மாத்திரம்' என்றும், உருவத்தன்மையாகிய சாதியின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' என்றுங் கூறப்பட்டது. சித்திரரூபத்தை வேறு பிரித்ததென்னை? வியாபியாதிருக்குங் கருமை முதலியவற்றின் கூட்டமே சித்திரரூபமாலோவெனின் ;—அற்றன்று, வியாபித்திருத்தலே உருவத்திற்கு நியமமாகலின். அற்றேல், சித்திரகலிங்கத்தில் அவயவவுருபு தோன்றுமென்றாமோவெனின் ;—என்றும். அவயவிக்கு உருவமின்மையான் ஆடை காட்சிப்பொருளன்றாதல் பெறப்படுமாகலின். காட்சியைப் பயப்பது உருவ மென்றாது உருவுடைப்பொருளிற் சமவேதமெனக் கோடல் மிகையாமென மறுக்க. இதனானே ஆடை காட்சிப் பொருளாதல் வேறொன்றாற் பெறப்படாமையின், சித்திரவுருவம் உண்டென்பது பெற்றாம்.

19. இரதம் நாவினாற் கவரப்படுங் குணம். அதுவும் தித்திப்பு, புளிப்பு, கார்ப்பு, காழ்ப்பு, கைப்பு, துவர்ப்பு என்னும் வேறுபாட்டால் அறுவகைத்து. மண்ணினும் நீரினும் இருப்பது. மண்ணில் ஆறுவிதமும்; நீரில் தித்திப்பொன்றே.

இரதம். எ-து. சுவையினிலக்கணங் கூறுகின்றது. உருவம் முதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'நாவினாற் கவரப்படுவது' என்றும், சுவைத்தன்மையின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' என்றுங் கூறப்பட்டது.

மண்ணினும். எ-து. சுவைக்குச் சார்பு கூறுகின்றது.

20. கந்தம் மூக்கினாற் கவரப்படுங் குணம். அதுவும் நறுநாற்றம் தீநாற்றம் என இருவகைத்து. பிருதிவியின் மாத்திரம் இருப்பது.

கந்தம். எ-து. நாற்றத்தினிலக்கணங் கூறுகின்றது. நாற்றத்தன்மையின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' என்றும், உருவமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு மூக்கினாற் 'கவரப்படுவது' என்றுங் கூறப்பட்டது.

21. பரிசம் துவக்கிந்திரியத்தான்மாத்திரம் கவரப்படுங் குணம். அது குளிர்ச்சி, சூடு, குளிர்ச்சியுஞ் சூடுமில்லது என்னும் வேறுபாட்டால் மூவகைத்து. பிருதிவி அப்புத் தேயு வாயுக்களில் இருப்பது. அவற்றுள், நீரில் குளிர்ச்சி, தேயுவில் சூடு, பிருதிவி வாயுக்களில் குளிர்ச்சியுஞ் சூடுமில்லாத பரிசம்

பரிசம். எ-து. ஊற்றினிலக்கணங் கூறுகின்றது. பரிசத்தன்மையின் அதிவியாத்தி, நீக்குதற்குக் 'குணம்' என்றும், சையோக முதலியனவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'மாத்திரம்' என்றுங் கூறப்பட்டது.

22. உருவமுதலிய நான்கும் பிருதிவியிற் பாகத்தாற் றோன்றுவனவாய், அநித்தமாயிருக்கும். மற்றவற்றிற் பாகத்தானன்றி இயல்பாய், நித்தமும் அநித்தமுமாயிருக்கும். நித்தப்பொருளைச் சேர்ந்தவை நித்தம். அநித்தப் பொருளைச் சேர்ந்தவை அநித்தம்.

'பாகத்தான்' எ-து. பாகந்தேயுவின் கூட்டம். அதனான் முன்னுருவமழிந்து வேற்றுருவந் தோன்றுமென்றவாறு. ஈண்டுப் பாகம் பரமாணுக்களுக்கே, துவியணுக முதலியவற்றிற்கன்று. ஆதலாற் பாகமாங்காறும் சூளையின் வைத்த குடத்திற் பரமாணுக்களுக்கு வேற்றுருவமுண்டாயவழிப் பசுங்குடங்கெட்டு மீளத்துவியணுகந்தோன்றுதல் முதலிய முறையானே செங்குடம் பிறக்கும். ஆண்டுப் பரமாணுக்கள் சமவாயிகாரணம், தேயுவின்கூட்டம் அசமவாயிகாரணம், ஊழ் முதலியன நிமித்தகாரணம். துவியணுகமுதலியவற்றின் உருவத்திற்குக் காரணவுருவம் அசமவாயிகாரணமென்பர் பீலுபாகவாதிகளாகிய வைசேடிகர். பீலு அணுவென்பன ஒரு பொருட்கிளவி. முற்குடத்துக்குக் கேடின்றியே பரமாணு முடிவான அவயவங்களினும் அவயவியினும் ஒருங்கே வேற்றுருவம் பிறக்குமென்பர் பிடரபாகவாதிகளாகிய நையாயிகர். பிருதிவியின் பரமாணுக்களின் உருவ முதலியன அநித்தமென்றதூஉம் இதனானே யென்பதாம். 'மற்றவற்றின்' எ-து. நீர் முதலியவற்றி னென்றவாறு. 'நித்தப்பொருளைச் சேர்ந்தவை' எ-து. பரமாணுக்களைச் சேர்ந்தவையென்றவாறு. 'அநித்தப்பொருளைச் சேர்ந்தவை' எ-து. துவியணுகமுதலியவற்றைச் சேர்ந்தவையென்றவாறு. உருவமுதலிய நான்கும் உற்பூதமாயுள்ளன காட்சிக்குப் புலனும், உற்பூதமல்லாதவை காட்சிக்குப் புலனாகாவெனக் கொள்க. உற்பூதத்தன்மையாவது காட்சியைப் பயப்பதொரு தருமவிசேடம், அதனின்மை அநுற்பூதத்தன்மை யென்பதாம்.

23. சங்கை ஒருமை முதலிய வழக்கிற்குக் காரணம். சங்கையெனினும் எண்ணெனினும் ஒக்கும். அது ஒன்பது பொருளினும் இருப்பது. ஒன்று முதற் பரார்த்த மீறாய் உள்ளது. அவற்றுள், ஒருமை நித்தப்பொருளைச் சேர்ந்தது நித்தம்; அநித்தப்பொருளைச் சேர்ந்தது அநித்தம். இருமை முதலிய எல்லாம் யாண்டும் அநித்தமே.

சங்கை. எ-து. எண்ணினிலக்கணங் கூறுகின்றது

24. பரிமாணம் அளத்தல் வழக்கிற்குச் சிறந்த காரணம். அது ஒன்பதுபொருளினும் உள்ளது. அது நுண்மை, பெருமை, குறுமை, நெடுமை என நான்கு வகைத்து.

பரிமாணம். எ-து. அளவினிலக்கணங் கூறுகின்றது.

அது. எ-து. பரிமாணத்தைப் பகுக்குகின்றது.

25. வேற்றுமை வேறென்னும் வழக்கிற்குச் சிறந்த காரணம். அது ஒன்பது பொருளினும் இருப்பது.

வேற்றுமை. எ-து. வேற்றுமையினிலக்கணங் கூறுகின்றது. 'இது இதனின் வேறு' என்னும் வழக்கிற்குக் காரணமென்றவாறு.

26. சையோகம் கூடியது என்னும் வழக்கிற்குக் காரணம். அது ஒன்பது பொருளினும் இருப்பது.

சையோகம். எ-து. கூட்டத்தினிலக்கணங் கூறுகின்றது. 'இவ்விரண்டுங்கூடி நின்றன' என்னும் வழக்கிற்குக் காரணமென்றவாறு. சையோகம் தொழிலாற் றோன்றியதும், சையோகத் தாற் றோன்றியதுமென இருவகைத்து. கையின் றொழிலாற் கைக்கும் புத்தகத்திற்கும் உளதாய சையோகம் தொழிலாற்றோன்றியது. கைக்கும் புத்தகத்திற்கும் உளதாய சையோகத்தானே உடம்பிற்கும் புத்தகத்திற்குமுளதாய சையோகம் சையோகத் தாற்றோன்றியது. சையோகம் வியாபியாமலிருப்பது. வியாபியாமலிருத்தல் தன்னத்தியந்தாபாவமுந்தானும் ஓரிடத்திருத்தல். ஏகதேசத்திருப்பதென்றவாறாயிற்று.

27. விபாகம் சையோகத்தை நாசம்பண்ணுங் குணம். விபாகமெனினும் பிரிவெனினுமொக்கும். அது ஒன்பது பொருளினும் இருப்பது.

விபாகம். பிரிவினிலக்கணங் கூறுகின்றது. காலமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' என்றும், உருவமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குச் 'சையோகத்தை நாசம் பண்ணுவது' என்றும், கூறப்பட்டது. விபாகமும் தொழிலாற்றோன்றியதும், விபாகத்தாற்றோன்றியதுமென இருவகைத்து. கைக்கும் புத்தகத்திற்கும் உளதாய பிரிவு தொழிலாற்றோன்றியது. கைக்கும் புத்தகத்திற்கும் உளதாய பிரிவால் உடம்பிற்கும் புத்தகத்திற்கும் உளதாய பிரிவு விபாகத்தாற்றோன்றியது.

28. பரத்துவம் முன்னென்னும் வழக்கிற்குச் சிறந்தகாரணம். பரத்துவமெனினும் முன்மையெனினுமொக்கும்.

பரத்துவம். எ-து. முன்மையினிலக்கணங் கூறுகின்றது.

29. அபரத்துவம் பின்னென்னும் வழக்கிற்குச் சிறந்தகாரணம். அபரத்துவமெனினும் பின்மையெனினுமொக்கும்.

அபரத்துவம் எ-து. பின்மையினிலக்கணங் கூறுகின்றது.

30. அவ்விரண்டும் திக்கினாற்பண்ணப்படுவனவும், காலத்தினாற்பண்ணப்படுவனவும் என இருவகைப்படும். அவற்றுள், திக்கினாற்பண்ணப்படும் பரத்துவம் சேய்மைக்கணுள்ளது. திக்கினாற்பண்ணப்படும் அபரத்துவம் அண்மைக்கணுள்ளது. காலத்தினாற் பண்ணப்படும் பரத்துவம் மூத்தோன்கணுள்ளது. காலத்தினாற் பண்ணப்படும் அபரத்துவம் இளையோன்கணுள்ளது.

அவ்விரண்டும். எ-து. அவற்றைப் பகுக்கின்றது.

திக்கினாற்பண்ணப்படும். எ-து. திக்கினாற்பண்ணப்படுவனவற்றிற்கு உதாரணங் கூறுகின்றது.

காலத்தினாற்பண்ணப்படும். எ-து. காலத்தினாற்பண்ணப்படுவனவற்றிற்கு உதாரணங் கூறுகின்றது.

31. குருத்துவம் ஆதியில் வீழ்ச்சிக்கு அசமவாயி காரணம். குருத்துவமெனினும் திண்மையெனினு மொக்கும். அது பிருதிவியினும் நீரினும் இருப்பது.

குருத்துவம். எ-து. திண்மையி னிலக்கணங் கூறுகின்றது. இரண்டாம் வீழ்ச்சி முதலியவற்றிற்கு வேகம் அசமவாயிகாரணமாகலின், வேகத்தின் அதிவியாத்தி நீக்குதற்கு 'ஆதி' எனப்பட்டது.

32. திரவத்துவம் ஆதியில் ஒழுகுவதற்கு அசமவாயிகாரணம். திரவத்துவமெனினும் நெகிழ்ச்சியெனினும் ஒக்கும். அது பிருதிவி அப்புத் தேயுக்களில் இருப்பது. அது இயல்பாயுள்ளது, நிமித்தத்தாலுள்ளது என இருவகைத்து. நீரின் இயல்பாயுள்ளது. பிருதிவி தேயுக்களின் நிமித்தத்தாலுள்ளது. பிருதிவியின் நெய் முதலியவற்றின் நெருப்புக் கூடுதலால் உண்டாகிய நெகிழ்ச்சி. தேயுவிற் பொன் முதலியவற்றி னுண்டாவது.

திரவத்துவம். எ-து. நெகிழ்ச்சியிலக்கணங் கூறுகின்றது. 'ஒழுகுதல்' பாய்தல்.

அது. எ-து. அவற்றைப் பகுக்கின்றது. தேயுவின் கூட்டத்தாற் பிறந்தது நிமித்தத்தாலுண்டாயது, அதனின்வேறாயது இயல்பாலுள்ளதென்க. நெய்முதலியவற்றின். எ-து. பிருதிவியின் நிமித்தத்தாலாயதற்கு உதாரணம். பொன்முதலியவற்றின். எ-து. அதற்குத் தேயுவினுதாரணம்.

33. சிநேகம் பொடி முதலியவற்றைத் திரட்டுவதற்கு ஏதுவாய குணம். நீரின்மாத்திரம் இருப்பது.

சிநேகம். எ-து. சிநேகத்தினிலக்கணங் கூறுகின்றது. காலமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' எனவும், உருவமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குத் 'திரட்டுதல்' எனவுங் கூறப்பட்டது.

34. சத்தம் செவியாற் கவரப்படுங் குணம். ஆகாயத்தின்மாத்திரம் இருப்பது. அது ஒலிவடிவும், எழுத்துவடிவும் என இருவகைத்து. அவற்றுள், ஒலிவடிவு பேரிகை முதலியவற்றில் தோன்றுவது. எழுத்து வடிவு வடமொழி முதலிய பாடை வடிவாயுள்ளது. இது எல்லா வழக்கிற்கும் காரணம்.

சத்தம். எ-து. ஓசையிலக்கணங் கூறுகின்றது. ஓசைத்தன்மையின் அதிவியாத்தி நீக்குதற்குக் 'குணம்' என்றும், உருவமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குச் 'செவியான்' என்றுங் கூறப்பட்டது. ஓசை கூட்டத்தாற்பிறந்ததும், பிரிவாற் பிறந்ததும், ஓசையாற்பிறந்ததுமென மூவகைத்து. அவற்றுள், முதலது முரசுங்குணிலுங்கூடிய கூட்டத்திற் பிறந்தது. இரண்டாவது மூங்கில் பிளவுபடுங்கால் அவ்விரண்டின் பிரிவாற்றோன்றுவதாய சடசடவோசை. மூன்றாவது முரசு முதலிய விடந்தொடங்கிச் செவிகாறும் இரண்டாமோசை முதலிய ஓசையாற்றோன்றுவது.

35. எல்லாவழக்கிற்குங் காரணமான புத்தி அறிவு. அது நினைவு அநுபவமும் என இரு வகைத்து.

புத்தி. எ-து. புத்தியிலக்கணங் கூறுகின்றது. 'அறிகின்றேன்' எனப் பின்னிகழு முணர்ச்சியாற் குறிக்கப்படும் அறிவுத் தன்மையே இலக்கணமென்பதாம்.

அது. எ-து. புத்தியைப் பகுக்கின்றது.

36. நினைவு வாசனையாற்றோன்றும் ஞானம். அநுபவம் அதனின் வேறாய ஞானம். அது உண்மையநுபவம், இன்மையநுபவம் என இருவகைத்து.

நினைவு. எ-து. நினைவினிலக்கணங் கூறுகின்றது. பாவனையெனப் பெயரிய வாசனையென்க. வாசனையினது அழிவுபாட்டின் அதிவியாத்தி நீக்குதற்கு 'ஞானம்' என்றும், குடமுதலியவற்றின் காட்சியுணர்வின் அதிவியாத்தி நீக்குதற்கு 'வாசனையாற்றோன்றியது' என்றும் கூறப்பட்டது.

அநுபவம். எது. அநுபவத்தினிலக்கணங் கூறுகின்றது. நினைவிற்கு வேறாய உணர்வு அநுபவ மென்பதாம்.

அது. எ-து. அநுபவத்தைப் பகுக்கின்றது.

37. **அஃதுடைப்பொருளின்கண் அது விசேடணமாக நிகழும் அனுபவம் உண்மையனுபவம். அதுவே பிரமையென்று உரைக்கப்படும். அஃதில்பொருளின்கண் அது விசேடணமாக நிகழும் அனுபவம் இன்மையனுபவம். அது பிரமம்.**

அஃதுடைப்பொருளின்கண். எ-து. உண்மையனுபவத்தினிலக்கணங் கூறுகின்றது. அற்றேல், 'குடத்தின்கட் குடத்தன்மை' என்னுமுணர்ச்சிக்கண் அவ்வியாத்திக்குற்றந் தங்கும், குடத்தன்மையின்கட் குடமின்மையாலெனின்:— அற்றன்று, எதன்கண் எதன் சம்பந்தமுண்டு அதன்கண் அதன் சம்பந்தத்தினனுபவமென்பது பொருளாகலின். குடத்தின்கட்குடசம்பந்தம் உண்மையான், அவ்வியாத்தியின்மை யுணர்க. 'அது' என்பது உண்மையனுபவமே பிரமையென நூலின்கட் கூறப்படுவதென்பதாம்.

அஃதில்பொருளின்கண். எ-து. இன்மையனுபவத்தினிலக்கணங் கூறுகின்றது. அற்றேல், 'இது சையோகமுடைத்து' என்னும் பிரமைக்கண் அதிவியாத்தி வருமாலோவெனின்;—அற்றன்று, எதன்வரைவான் எதன்சம்பந்தமில்லை அதன்வரைவான் அதன் சம்பந்தவுணர்ச்சி இன்மையனுபவ மென்பது கருத்தாகலின். சையோகமின்மையான் வரைந்த சையோகவுணர்ச்சி மயக்கமாகலின், சையோகத்தான் வரைந்த சையோகசம்பந்தவுணர்ச்சி உளதாகலின், அதிவியாத்தியின்மை யுணர்க.

38. **உண்மையனுபவம் காட்சி, அநுமிதி, உபமிதி, சாத்தம் என்னும் வேறுபாட்டால் நால்வகைத்து. அதன் கரணமும் காண்டல், அனுமானம், உவமானம், சத்தம் என்னும் வேறுபாட்டால் நான்குவகைத்து.**

உண்மையனுபவம். எ-து. உண்மையனுபவத்தைப் பகுக்கின்றது.

அதன் கரணமும். எ-து. தொடர்பாட்டாற் கரணத்தையும் பகுக்கின்றது. 'அதன்கரணம்' எ-து. பிரமைக்குக் கரணமென்றவாறு. பிரமைக்குக் கரணம் பிரமாணமென்பது பிரமாணத்தின் பொதுவிலக்கணம். உண்மையனுபவவறிவிற்குக் கருவியாயுள்ளது பிரமாணமென்பது பொருள்.

39. **கரணமாவது சிறப்புக்காரணம்.**

கரணமாவது. எ-து. கரணத்தினிலக்கணங் கூறுகின்றது. சாதாரணகாரணமாகிய காலம் திக்கு முதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குச் 'சிறப்புக்காரணம்' எனப்பட்டது.

40. **காரணம் காரியத்துக்கு நியதமாய் முன்னிற்பது.**

காரணம். எ-து. காரணத்தினிலக்கணங்கூறுகின்றது. கழுதை முதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'முன்னிற்பது' என்றொழியாது 'நியதமாய்' என்றும், காரியத்தின் அதிவியாத்தி நீக்குதற்கு 'நியதமாய்' என்றொழியாது 'முன்னிற்பது' என்றும், கூறப்பட்டது. 'நியதம்' இன்றியமையாமை. அற்றேல், நூலுருவும் ஆடையைக் குறித்துக் காரணமாலோவெனின்:— அற்றன்று, பிறிதோராற்றாற் பெறப்படாததாயென்னும் அடைகொடுக்கற்பாற்றாகலின். பிறிதோராற்றாற்பெறப்படாமை பிறிதோராற்றாற் பெறப்படுதலின்மை. பிறிதோராற்றாற் பெறப்படுதல் மூவகைத்து. எதனோடு கூடியே எதனைக் குறித்து முன்னிற்பதென்று உணரப்படுவது யாது அஃது அதனைக் குறித்து அதனாலே பிறிதோராற்றாற் பெறப்படுவது. அது நூலோடு

கூடி நூலுருவமும் நூற்றன்மையும் ஆடையைக் குறித்து முன்னிற்பதென்று உணரப்படுவது, ஒன்று. பிறிதொன்றனைக் குறித்து முன்னிற்றலுணர்ந்துழி எடுத்துக்கொண்டதனைக் குறித்து முன்னிற்றலுணரப்படுவதி யாது அஃது அவ்வெடுத்துக்கொண்டதனைக் குறித்துப் பிறிதோராற்றாற் பெறப்படுவது; அஃது ஆகாயம் ஓசையைக்குறித்து முன்னிற்றலுணர்ந்துழிக் குடத்தைக் குறித்து ஆகாயம் முன்னிற்பதென்றுணரப்படுவது, ஒன்று. மற்ற விடங்களிலே நியதமாய் முன்னிற்பது இதுவென்று துணியப்பட்டதனாற்றானே காரியந்தோன்றுழி அதனோடு உடனிகழ்வது பிறிதோராற்றாற் பெறப்படுவது: அது பாகத்தாற்றோன்றும் நிலத்து உருவத்தின் முன்னபாவம் நாற்றத்தைக் குறித்து முன்னிற்பதென்பது, ஒன்று. ஆகமூன்றுந் தெரிந்துகொள்க. இங்ஙனங் கூறியவாற்றாற் பிறிதோராற்றாற் பெறப்படாததாய் இன்றியமையாது முன்னிற்பது காரணமெனக் கொள்க.

41. காரியம் முன்னின்மைக்கு எதிர்மறை.

காரியம். எ-து. காரியத்தினிலக்கணங் கூறுகின்றது.

42. அக்காரணம் சமவாயி, அசமவாயி, நிமித்தம் என்னும் வேறுபாட்டால் மூவகைத்து. எதன்கண் ஒற்றித்துக் காரியம் தோன்றும் அது சமவாயிகாரணம். அஃதெங்ஙனம்: நூல்கள் ஆடைக்குச் சமவாயிகாரணம். ஆடையும் தன்னையடைந்த உருவமுதலியவற்றிற்குச் சமவாயிகாரணம். காரியத்துடனாகத்தான் காரணத்துடனாகத்தான் ஒருபொருளிற் சமவேதித்துக் காரணமாயிருப்பது அசமவாயிகாரணம்: அஃதெங்ஙனம், நூலியைபு ஆடைக்கு நூலுருவம் ஆடையுருவிற்கு, அசமவாயிகாரணம். அவ்விரண்டின் வேறாய காரணம் நிமித்தகாரணம்: அஃதெங்ஙனம், ஆடைக்கு நாடா வேமா முதலியன. இங்ஙனம் கூறிய மூவகைக்காரணத்துள் யாது சிறந்தகாரணம் அதுவே கரணம்.

அக்காரணம். எ-து. காரணத்தைப் பகுக்கின்றது.

எதன்கண். எ-து. சமயவாயிகாரணத்தினிலக்கணங் கூறுகின்றது.

காரியத்துடன். எ-து. அசமவாயிகாரணத்தினிலக்கணங் கூறுகின்றது.

நூலியைபு. எ-து. 'காரியத்துடன்' என்பதற்கு உதாரணங் கூறுகின்றது. தன்காரியமாகிய ஆடையோடும் ஒரு நூலின்கட் சமவேதித்திருத்தலான். நூலியைபு ஆடைக்கு அசமவாயிகாரணமென்றவாறு.

நூலுருவம். எ-து. 'காரணத்துடன்' என்பதற்கு உதாரணங் கூறுகின்றது. தன்காரியத்தின் சமவாயிகாரணமாகிய ஆடையுடன் ஒருநூலின்கட் சமவேதித்திருத்தலான், நூலுருவம் ஆடையுருவிற்கு அசமவாயிகாரணமென்றவாறு.

அவ்விரண்டின். எ-து. நிமித்தகாரணத்தினிலக்கணங் கூறுகின்றது. சமவாயிகாரணம், அசமவாயிகாரணமாகிய இரண்டின் வேறாகிய காரணமென்றவாறு.

இங்ஙனங்கூறிய. எ-து. கரணத்தினிலக்கணம் முடிந்தது முடித்தலென்னுமுத்தியாற் கூறுகின்றது.

பிரத்தியக்ஷப்பிரமாணம்

43. அக்கரணம் நான்கனுள், காண்டலாவது புலப்படக்காணுங் காட்சியறிவிற்குக் கரணம். காட்சியறிவு இந்திரிய விடய சம்பந்தத்தாற்றோன்றும் ஞானம். அது நிருவிகற்பகம், சவிகற்பகம் என இருவகைத்து. அவற்றுள், நிருவிகற்பகம் விசேடணமின்றித் தோன்றும் ஞானம். சவிகற்பகம் 'இவன் சாத்தன்' 'இவன் கரியன்' 'இவன் பார்ப்பான்' என விசேடணத்தோடு தோன்றும் ஞானம்.

அக்கரணம் நான்கனுள். எ-து. காண்டலளவையினிலக்கணங் கூறுகின்றது.

காட்சியறிவு. எ-து. காட்சியறிவினிலக்கணங் கூறுகின்றது. இந்திரியம் கண் முதலியன. விடயம் குடமுதலியன. அவ்விரண்டன் சம்பந்தம் சையோக முதலியன. அச்சையோக முதலிவற்றாற் பிறந்தவுணர்வென்பதாம்.

அவற்றுள், நிருவிகற்பம். எ-து. நிருவிகற்பக்காட்சியிலக்கணங் கூறுகின்றது. விசேடணவிசேடியங்களின் சம்பந்தங் கவராதவுணர்வென்றவாறு. அற்றேல், நிருவிகற்பகம் உண்டென்பதற்குப் பிரமாணமென்னையெனின்:— 'ஆத்தன்மை யான் அடையடுத்த ஆவென்னும் விசேடியஞானம் விசேடணஞானத் தாற் றேன்றற்பாலது, விசேடியஞானமாகலின், குழையனென்னு ஞானம்போலும்' என்னும் அனுமானமே பிரமாணமென்க. விசேடணஞானமும் சவிகற்பகமெனின் வரம்பின்றி யோடுமாகலின், நிருவிகற்பக முண்டென்பது பெறுதும்.

சவிகற்பகம். எ-து. சவிகற்பகத்தினிலக்கணங் கூறுகின்றது. பெயர் சாதி முதலிய விசேடணவிசேடியங்களின் சம்பந்தங் கவருஞானமென்பதாம். 'இவன்சாத்தன்' 'இவன்கரியன்' என்றது சவிகற்பகத்துக்கு உதாரணம்.

44. காண்டலறிவிற்கேது இந்திரிய விடய சம்பந்தம். சம்பந்தமெனினும், இயைபெனினும், யாப்பெனினும், கிழமையெனினும் ஒக்கும். அச்சம்பந்தம் சையோகமும், சையுத்த சமவாயமும், சையுத்த சமவேத சமவாயமும், சமவாயமும், சமவேத சமவாயமும், விசேடண விசேடியத் தன்மையும் என அறுவகைப்படும். கண்ணிணற் குடத்தைக் காணுங்கால் சையோகசம்பந்தம். குடவுருவத்தைக் காணுங்கால் சையுத்தசமவாயம், கண்ணோடு சையுத்தமான குடத்தில் உருவம் சமவாயமாதலாலென்க. உருவத்தன்மைப் பொதுமையைக் காணுங்கால் சையுத்தசமவேதசமவாயம், கண்ணோடு சையுத்தமான குடத்தில் உருவஞ் சமவேதம், உருவத்தில் உருவத்தன்மை சமவாயமாதலாலென்க. செவியாற் சத்தத்தை உணருங்கால் சமவாய சம்பந்தம், செவித்துளையிலிருக்கும் ஆகாயமே சோத்திரமாதலால் சத்தம் ஆகாய குணமாதலிற் குணகுணிகட்குச் சமவாயம் உண்மையானென வுணர்க. ஓசைத்தன்மையை உணருங்கால் சமவேதசமவாயம், சோத்திரத்திற் சமவேதமான சத்தத்திற் சத்தத்தன்மை சமவாயமாயிருத்தலானென்க. அபாவத்தைக் காணுங்கால் விசேடணவிசேடியத்தன்மைச் சம்பந்தம். 'குடமில்லது தப்இபூதலம்' என்புழிக் கண்ணோடு சையுத்தமான பூதலத்திற் குடமின்மை விசேடணமாயும் 'பூதலத்திற் குடமில்லை' என்புழிக் குடமின்மை விசேடியமாயும் இருத்தலானென்க. இங்ஙனங் கூறிய ஆறு சம்பந்தத்தினும் தோன்றும் உணர்வு காட்சி. அதற்குக் கரணம் இந்திரியம். அதனல் இந்திரியமே காண்டலளவையென்பது பெறப்பட்டது.

அச்சம்பந்தம். எ-து. இந்திரிய விடயசம்பந்தத்தைப் பகுக்கின்றது.

கண்ணிணல். எ-து. சையோக சம்பந்தத்திற்கு உதாரணங் கூறுகின்றது. திரவியக்காட்சியில் யாண்டுஞ் சையோகமே சம்பந்த மென்பதாம். ஆன்மா மனத்தோடும், மனம் இந்திரியத்தோடும், இந்திரியம் பொருளோடுங் கூடும்; அதனற் காட்சியுணர்வு நிகழுமென வுணர்க.

குடவுருவத்தை. எ-து. சையுத்தசமவாயத்திற்கு உதாரணங் கூறுகின்றது.

கண்ணோடு. எ-து. அதற்கேதுக் கூறுகின்றது.

உருவத்தன்மைப்பொதுமையை [illegible] சையுத்தசமவேத சமவாயத்திற்கு உதாரணங் கூறுகின்றது.

செவியால். எ-து. சமவாயத்திற்கு உதாரணங் கூறுகின்றது.

செவித்துளையில், எ-து. அதனைத் தெரித்துணர்த்துகின்றது. அற்றேல், செய்மைக்கண்ணதாகிய ஓசை செவியின்கட் சம்பந்திப்பது எவ்வாறெனின்;—வீசிதரங்கநியாயத்தாற்றான் கதம்பமுகுளநியாயத்தாற்றான் வெவ்வேறோசையைத் தோற்றுவிக்குமுறையானே செவிப்புலத்தின்கட்டோன்றிய ஓசைக்குச் செவிச்சம்பந்தமுண்மையாற் காட்சியுணர்வு நிகழு மென்க.

ஓசைத்தன்மையை. எ-து. சமவேதசமவாயத்திற்கு உதாரணங் கூறுகின்றது.

அபாவத்தை. எ-து. விசேடணவிசேடியத்தன்மைக்கு உதாரணங் கூறுகின்றது.

குடமில்லது. எ-து. அதனைத் தெரித்துணர்த்துகின்றது. இதனானே அனுபலத்தி வேறு பிரமாணமென்பதூஉம் மறுக்கப்பட்டது. 'ஈண்டுக் குடமுண்டாயின் இப்பொழுது நிலம்போலக் காணப்பட வேண்டும், காட்சியின்மையான் இல்லை' என்று தர்க்கஞ் செய்யப்படும் எதிர்மறைப்பொருளினுண்மையினுணர்வு பெருமையோடு கூடிய இந்திரியத்தானே அபாவவுணர்வு தோன்றுதலின், அனுபலத்தி வேறுபிரமாணமென்றல் பொருந்தாமையுணர்க, இடமுணர்தற்பொருட்டு வேண்டப்படும் இந்திரியமே கரணமாயவழி அனுபலத்தி கரணமென்றல் பொருந்தாமையின். விசேடணவிசேடியத்தன்மை விசேடண விசேடிய சொரூபமேயன்றி வேற்றுச்சம்பந்தமன்று.

இங்ஙனம். எ-து. காட்சியுணர்வு முடிந்ததுமுடித்தலென்னு முத்தியாற் கூறி அதற்குக் கருவி கூறுகின்றது. சிறப்புக் காரணமாகலின், இந்திரியம் காட்சியுணர்விற்குக் கருவியென்றவாறு.

அதனால். எ-து. காண்டலளவை முடிந்ததுமுடித்தலென்னு முத்தியாற் கூறுகின்றது.

அனுமானப்பிரமாணம்.

45. இனி அனுமானமாவது அனுமிதிக்குக் கரணம் அனுமிதி ஆராய்ச்சியாற்றோன்றும் ஞானம். ஆராய்ச்சி வியாத்தியடுத்த பக்க தருமத்தன்மை ஞானம்: அது 'வன்னியின் வியாப்பியமான புகையுடையது இம்மலை' என்னும் ஞானம். அவ்வாராய்ச்சியாற் றோன்றியது 'இம்மலை தீயுடைத்து' என்னும் உணர்வு. அதுவே அனுமிதி யென்க. வியாத்தி 'யாண்டுப் புகை ஆண்டுத்தீ' என நியதமான உடனிகழ்ச்சி. பக்கதருமத்தன்மை வியாப்பியமான புகை மலை முதலிய பக்கத்தினிருத்தல்.

இனி அனுமானம். எ-து. அனுமான விலக்கணம் கூறுகின்றது.

அனுமிதி. எ-து. அனுமிதியிலக்கணங் கூறுகின்றது. அற்றேல், 'குற்றியோ மகனோ' என்னும் ஐயத்தின் பின்னர் 'மகன்மையான் வியாபிக்கப்படுங் கை கான் முதலியனவுடையன் இவன்' என்னும் ஆராய்ச்சியான் 'மகனே' என்னுங்காட்சியுணர்வு பயத்தலின் ஆண்டு அனுமிதியுணர்வே பயப்பதெனின், 'மகனைப் புலப்படக் காண்கின்றேன்' எனப் பின்னிகழுமுணர்விற்கு மாறுகோடலின், அதன் 'ஆராய்ச்சியாற்றோன்றும் ஞானம்' என்னும் இலக்கணத்திற்கு ஐயத்தின் பின்னர்த்தாகிய காட்சிக்கண் அதிவியாத்தி வருமாலோவெனின்;—அற்றன்று, பக்கத் தன்மையோடு கூடிய ஆராய்ச்சியாற் றோன்றும் ஞானமென்பது கருத்தாகலின், பக்கத்தன்மையாவது துணிதல் வேட்கையில்லாமையோடு கூடிய துணிபொருட்பெறுதியின்மை, துணிபொருட்பெறுதி அனுமிதியுணர்விற்குத் தடை, துணிதல் வேட்கை அதற்கு மாற்று, பெறுதியுள்ளவழியும் 'அனுமிப்பேன்' என்னும் வேட்கையான் அனுமிதியுணர்வு நிகழக் காண்டலின், நெருப்பின் சுட்டைத் தடுப்பது மணி, அதற்கு மாற்று மந்திரமாதல் போலு மென்க. எனவே, மாற்றின்மையோடு கூடிய

மணியின் அபாவம் சுடுதற்காரணமாதல்போலத் துணியும் விருப்பமில்லாமையோடு கூடிய பெறுதியின்மையும் அனுமிதியுணர்விற்குக் காரணமாதல் பெறப்பட்டது.

ஆராய்ச்சி. எ-து. ஆராய்ச்சியிலக்கணங் கூறுகின்றது. வியாத்தியை விடயமாகவுடைய பக்கதருமத்தன்மை ஞானம் யாது அது ஆராய்ச்சியென்பதாம். 'அது' எ-து. ஆராய்ச்சியைத் தெரித்துக்காட்டியவாறு. 'அவ்வாராய்ச்சியால்.' எ-து. அனுமிதியுணர்வினைத் தெரித்துக்காட்டியவாறு.

வியாத்தி. எ-து. வியாத்தியிலக்கணங் கூறுகின்றது. 'யாண்டுப் புகை.' என்பது. வியாத்தியைத் தெரித்துக்காட்டியவாறு. 'நியதமான உடனிகழ்ச்சி' எ-து. இலக்கணம். 'உடனிகழ்ச்சி' ஒருநிலைக்களத்திருத்தல். அது நியதமாதல் ஏதுவினிலைக்களத்துளதாகிய முழுதுமபாவத்திற்கு எதிர்மறையாகாத துணிபொருளினிலைக்களத்துளதாதல். அதுவே வியாத்தியென்பதாம்.

பக்கதருமம். எ-து. பக்கதருமத்தன்மை இன்னதென்கின்றது.

46. இவ்வனுமானம் தன்பொருட்டனுமானம், பிறர் பொருட்டனுமானம் என இருவகைத்து.

இவ்வனுமானம். எ-து. அனுமானத்தைப் பகுக்கின்றது.

47. தன்பொருட்டனுமானம் தனக்கு அனுமிதி ஞானம் விளங்குதற்குக் காரணம்: அங்ஙனமன்றே, ஒருவன் தானே அடுத்தடுத்துக் காண்டலால் 'யாண்டுப்புகை ஆண்டுத் தீயுண்டு' என அடுக்களை முதலியவற்றின் அவ்விரண்டற்குப் வியாத்தியை உணர்ந்து, மலையின் அண்மைக்கட்சென்றான்; ஆண்டுச் சென்றுழி 'இம்மலையில் தீயுண்டோ இல்லையோ' என ஐயுற்றான்; அம்மலையின்மேற் புகையைக் கண்டுழி 'யாண்டுப் புகை ஆண்டுத் தீ' என்னும் வியாத்தி நினைவு நிகழும். அந்நினைவு நிகழ்ந்த பின்னர்,

'வன்னியின் வியாப்பியமான புகையுடையது இம்மலை' என்னும் உணர்வு தோன்றும்: அதுவே இலிங்கபராமரிசமெனப்படும். அதனால் 'இம்மலை நெருப்புடைத்து' என்னும் அனுமிதிஞானம் தோன்றும். இது தன்பொருட்டனுமான மென்க. இலிங்கபராமரிசமெனினும் குறியாராய்ச்சியெனினும் ஒக்கும்.

ஒருவன். எ-து. தன்பொருட்டனுமானத்தைத் தெரித்துக்காட்டுகின்றது. அற்றேல், 'யாண்டுப் பிருதிவியின் கூருந்தன்மை ஆண்டு இரும்பாற்போழற்பாலதாந்தன்மை' என்றற்றொடக்கத்து உடனிகழ்ச்சி பலகாற் கண்டுழியும் வயிரமணி முதலியவற்றிற் பிறழக் காண்டலின், அடுத்தடுத்துக் காண்டலால் வியாத்தி கவர்தல் யாண்டையதெனின்;—அற்றன்று, பிறழ்ச்சியுணர்வின்மையோடு கூடிய உடனிகழ்ச்சியுணர்வே வியாத்தியைத் தெரிவிப்பதாகலின். பிறழ்ச்சியுணர்வு துணிவும் ஐயமுமென இருவகைத்து. அவற்றுள், துணிவு இயல்பானே தெரிந்து நீக்கப்படும். ஐயப்பிறழ்ச்சி தருக்கத்தாற்றெரிந்து நீக்கப்படும். புகை தீக்களின் வியாத்தியுணர்தற்கட் பிறழ்ச்சியைப்பாடு நீக்குவது காரிய காரணத்தன்மைக்குக் கேடு வருமென்னுந் தருக்கமா மென்க. அற்றேல், உலகத்துள்ள எல்லாப்புகைதீக்களும் காட்சிப்படாமையின் வியாத்தியுணர்ச்சி யாண்டையதெனின்;—அற்றன்று, புகைத்தன்மை தீத்தன்மையாகிய அவற்றின் பொதுமைச்சாதி உணரப்படுதலின் எல்லாப் புகைதீக்களினுணர்வும் நிகழுமாகலினென்க. 'அதனால்' எ-து. இலிங்கபராமரிசத்தா னென்றவாறு.

48. பிறர்பொருட்டனுமானமாவது தான் புகையால் வன்னியை அனுமித்து, பிறர் உணர்தற்பொருட்டு ஐவகை யுறுப்புக்களையுடைய வாக்கியத்தைக் கூறுவது. வாக்கியமெனினும் தொடர்மொழியெனினும் ஒக்கும். அது 'மலை தீயுடைத்து, புகையுடைமையால், யாது யாது புகையுடைத்து அது அது தீயுடைத்து அடுக்களைபோல, இதுவும் அங்ஙனம், ஆதலின் இங்ஙனம்' என வரும்.

இதனாற் கூறப்பட்ட இலிங்கத்தால் பிறரும் தீயுண்டெனத் தெளிவர்.

பிறர்பொருட்டனுமானம். எ-து. பிறர்பொருட்டனுமானங் கூறுகின்றது.

அது. எ-து. ஐவகையுறுப்புக்களையுடைய வாக்கியத்திற்கு உதாரணங் கூறுகின்றது.

49. ஐவகையுறுப்புக்களாவன, பிரதிஞ்ஞை, ஏது, உதாரணப், உபநயம், நிகமனம் என இவை. பிரதிஞ்ஞை, மேற்கோள் என்பன ஒருபொருட்கிளவி. இதனுள் 'மலை தீயுடைத்து' என்பது பிரதிஞ்ஞை, 'புகையுடைமையால்' என்பது ஏது, 'யாது யாது புகையுடைத்து அது அது தீயுடைத்து அடுக்களைபோல' என்பது உதாரணம், 'இதுவும் அங்ஙனம்' என்பது உபநயம், 'ஆதலின் இங்ஙனம்' என்பது நிகமனம் எனவுணர்க.

ஐவகை. எ-து. ஐவகையுறுப்புக்களின் பெயர் கூறுகின்றது.

இதனுள். எ-து. எடுத்துக்காட்டிய வாக்கியத்தின் மேற்கோள் முதலிய வைந்தினையும் பகுத்துக் காட்டுகின்றது. பக்கத்தைத் துணிபொருளுடைத்தாகக் கூறுகின்றது மேற்கோள். இன், ஆன் என்னுமுருபீறாக இலிங்கத்தை எடுத்துக்காட்டுவது ஏது. வியாத்தியை எடுத்துக்காட்டுவது உதாரணம். பக்கதருமத் தன்மையுணர்தற்பொருட்டுத் திருட்டாந்தத்தைச் சார்த்திக் கூறுவது உபநயம். முடிந்தது முடித்தல் நிகமனம். மறுதலையின்மை காட்டன் முதலியன நிகமனத்திற்குப் பயனென்க.

50. தன்பொருட்டனுமிதி பிறர்பொருட்டனுமிதி என்னும் இவையிரண்டற்கும் இலிங்கவாராய்ச்சியே கருவி. அதனால் இலிங்கபராமரிசம் அனுமானமெனப்பட்டது.

தன்பொருட்டனுமிதி. எ-து. அனுமிதியுணர்விற்குக் காரணங் கூறுகின்றது. அற்றேல், வியாத்திநினைவும் பக்கதருமத்தன்

மையுணர்வுமே அனுமிதியைப் பிறப்பித்தலின் அடையடுத்த ஆராய்ச்சி வேண்டற்பாலதெற்றுக்கெனின்;—அற்றன்று, 'வன்னியின் வியாப்பியமான புகையுடைத்து இது' என்னும் சத்தபராமரிசத்தின்கண் ஆராய்ச்சி ஒருதலையான் வேண்டற்பாலதாகலின் எளிதாக யாண்டும் ஆராய்ச்சியே காரணமென்றல் பொருத்தமுடைத்தாகலின். இலிங்கமே கரணமாம் பிறவெனின்;—இறந்தது முதலியவற்றிற் பிறழ்தலான், ஆகாதென்க. வியாபாரமுடைத்தாகிய காரணமே காரணமென்பார் மதத்தின் ஆராய்ச்சி வழியான் வியாத்தியுணர்வு கரணமெனக் காண்க. வியாபாரம் அதனிற்றோன்றி அதனிற் றோன்றற்பாலதனைத் தோற்றுவிப்பது.

அதனால். எ-து. அனுமானத்தை முடிந்தது முடித்தலென்னுமுத்தியாற் கூறுகின்றது.

51. இலிங்கம் அந்நுவயவெதிரேகி, கேவலாந்நுவயி, கேவலவெதிரேகி என மூவகைத்து. அந்நுவயம் உடம்பாடு. வெதிரேகம் மறை.

இலிங்கம். எ-து. இலிங்கத்தைப் பகுக்கின்றது.

52. அந்நுவயத்தானும் வெதிரேகத்தானும் வியாத்தியுடையது அந்நுவயவெதிரேகி, வன்னியைச் சாதிக்குங்கால் புகையுடைமை அந்நுவயவெதிரேகி, 'யாண்டுப் புகை ஆண்டுத் தீ அடுக்களைபோல' என அந்நுவய வியாத்தியும் 'யாண்டுத் தீயில்லை ஆண்டுப் புகையில்லை மடுப்போல' என வெதிரேகவியாத்தியும் உடைமையின்.

அந்நுவயத்தானும். எ-து. அந்நுவயவெதிரேகியைத்தெரித்துணர்த்துகின்றது. ஏதுவிற்குந் துணிபொருட்கும் உளதாய வியாத்தி அந்நுவயவியாத்தி, அவ்விரண்டன் அபாவங்கட்கு உளதாய வியாத்தி வெதிரேகவியாத்தியென்றறிக.

53. இனி அந்நுவயத்தின்மாத்திரம் வியாத்தியுடையது கேவலாந்நுவயி: அஃதெங்ஙனம், 'குடம் அபிதேயம்,

பிரமேயத்தன்மையால், ஆடைபோல' என வரும். ஈண்டுப் பிரமேயத்தன்மை அபிதேயத்தன்மைகட்கு வெதிரேக வியாத்தியின்று, எல்லாப் பொருளும் பிரமேயமும் அபிதேயமுமாதலால். பிரமேயம் அளவையால் அளக்கற்பாலது. அபிதேயம் பெயரிட்டு வழங்கற்பாலது.

இனி அந்நுவயத்தின். எ-து. கேவலாந்நுவயியிலக்கணங் கூறுகின்றது. வேலாந்நுவயியாகிய துணிபொருட்கு இலிங்கம் கேவலாந்நுவயி. முழுதுமபாவத்திற்கு எதிர்மறையாகாமை வேலாந்நுவயித்தன்மை. இறைவனுணர்விற்கு விடயமாந்தன்மையும் எல்லாம் என்னும் மொழியான் வழங்கற்பாலதாந் தன்மையும் யாண்டுமுண்மையின், அவற்றிற்கு வெதிரேகமின்மையுணர்க.

54. இனிக் கேவலவெதிரேகி வெதிரேகத்தின் மாத்திரம் வியாத்தியுடையது: அஃதெங்ஙனம், 'பிருதிவி ஏனையவற்றின் வேறு, நாற்றமுடைமையின், யாது ஏனைப்பொருள்களின் வேறன்று அது நாற்றமுடைத்தன்று அப்புப் போல, இஃது அங்ஙனமன்று, ஆதலின் இங்ஙனமன்று' என வரும். ஈண்டு 'யாது நாற்றமுடைத்து அது ஏனைப் பொருள்களின் வேறு இதுபோல' என அந்நுவயத்தில் திருட்டாந்தம் இல்லை, பிருதிவி முழுதும் பக்கமேயாகலின்.

இனிக் கேவலவெதிரேகி. எ-து. கேவலவெதிரேகி யிலக்கணங் கூறுகின்றது.

பிருதிவி. எ-து. அதற்குதாரணங் கூறுகின்றது. அற்றேல், ஏனையவற்றின் வேறுதல் முன்னர்த் துணியப்பட்டதோ அன்றோ? துணியப்பட்டதெனின் யாண்டுத் துணியப்பட்டது ஆண்டு ஏதுவுண்டாயின் அந்நுவயமுடைத்தாதல் கூடும்; ஆண்டு ஏதுவின்றுயிற் சிறப்பென்னுமனைகாந்திகமாம்; அன்றெனின், துணிபொருளுணர்ச்சியின்மையின் அதனான் விசேடிக்கப்படும் அனுமிதியுணர்வு எங்ஙனந் தோன்றும்; விசேடணவுணர்ச்சியின்றி

விசேடிக்கப்பட்டதனுணர்வு பிறவாமையின். அன்றியும், எதிர்மறையுணர்ச்சியின்மையின் வெதிரேகவியாத்தியுணர்வும் உண்டாகாதாலோவெனின்;—அற்றன்று, அப்பு முதலிய பதின்மூன்றன்கண்ணும் ஒன்றற்கொன்று வேறுந்தன்மை உளவாமன்றே, அப்பதின்மூன்றன்கண்ணும் தனித்தனி துணியப்பட்ட வேறுதற் றன்மை பின்னர்ப் பிருதிவியின்கண் ஒருங்கு துணியப்படுமாகலினென்க. பதின்மூன்றன்றன்மையானும் வரைந்துகொள்ளப்பட்ட வேறுதற்றன்மை ஒருநிலைக்களத்திராமையின், அந்நுவயமுடைத்தாகாமையும் சிறப்பனைகாந்திகமின்மையுமுணர்க. தனித்தனி நிலைக்களத்து முன்னர்த் துணியப்பட்டதாகலின் துணிபொருள் விசேடணத்தான் அடுத்த அனுமிதியுணர்வுங் கூடும், வெதிரேகவியாத்தியும் உண்டென்க.

55. பக்கம் ஐயுற்றுத் துணியும் பொருளுக்கிடம்: அஃதெங்ஙனம், புகையுடைமையாகிய ஏதுவில் மலை பக்கம். சபக்கம் துணிந்த பொருளுக்கிடம்: அஃதெங்ஙனம், அவ்வேதுவில் அடுக்களை. துணிந்தபொருளில்லாவிடம் விபக்கம்: அஃதெங்ஙனம், ஆண்டு மடு.

பக்கம். எ-து. பக்கத்தினிலக்கணங் கூறுகின்றது. அற்றேல், வேதவாக்கியங்களான் ஆன்மா உண்டென்பது துணியப்பட்டதாகலின் ஆண்டு ஐயமின்மையிற் கேள்வியின் பின்னர்த்தாகிய சிந்தனைக்கண்ணும், காட்சிப்புலனாகிய நெருப்பின்கண் துணிதல்வேட்கை உளதாயவழி அனுமிதியுணர்வு பிறத்தலின் ஆண்டும், அவ்வியாத்தி வருமாலோவெனின்;—அற்றன்று, முன்னர்க் கூறிய பக்கத்தன்மைக்குப் பற்றுக்கோடாதல் பக்கத்துக்கு இலக்கணமாகலின்.

சபக்கம். எ-து. சபக்கத்தினிலக்கணங் கூறுகின்றது.

துணிந்த. எ-து. விபக்கத்தினிலக்கணங் கூறுகின்றது.

56. இனி ஏதுப்போலி சவ்வியபிசாரம், விருத்தம், சற்பிரதிபக்கம், அசித்தம் பாதிதம் [illegible] ஐவகைத்து.

இனி ஏதுப்போலி. எ-து. இங்ஙனம் உண்மையேதுவைத் தெரித்துணர்த்தி, ஈண்டு இன்மையேதுவைத் தெரித்துக்காட்டும் பொருட்டுப் பகுக்கின்றது. அநுமிதியுணர்விற்குத் தடையாய உண்மையனுபவவுணர்வினை விடயமாகக் கோடல் ஏதுப்போலியிலக்கணம்.

57. அவற்றுள், சவ்வியபிசாரம் அநைகாந்திகம், பிறழ்ச்சியுடையது. அது பொதுவும், சிறப்பும், முடிவுபெருமையும் என மூவகைத்து.

அவற்றுள். எ-து. அநைகாந்திகத்தினிலக்கணங் கூறுகின்றது.

அது. எ-து. அநைகாந்திகத்தைப் பகுக்கின்றது.

58. அவற்றுள், பொதுவநைகாந்திகவேதுப்போலி துணிபொருளில்லாவிடத்தும் இருக்கும் ஏது: அது 'இம்மலை தீயுடைத்து, அளவையான் அளக்கற்பாலதாகலின்' என்பதாம், அளவையான் அளக்கற்பாலதாந்தன்மை தீயில்லாவிடமாகிய நீர்த்தடாகத்தினும் இருத்தலினென்க.

அவற்றுள், பொது. எ-து. பொதுவநைகாந்திகத்தினிலக்கணங் கூறுகின்றது.

அது. எ-து. அதற்குதாரணங் கூறுகின்றது.

59. சிறப்பநைகாந்திகம் சபக்க விபக்கங்களெல்லாவற்றினும் இல்லாதது: அது 'சத்தம் நித்தியம், சத்தத்தன்மையுடைமையான்' என்பது, சத்தத்தன்மை நித்த அநித்தப்பொருள் எல்லாவற்றினும் இன்றிச் சத்தத்தின் மாத்திரம் இருப்பது.

சிறப்பு. எ-து. சிறப்பநைகாந்திகத்தினிலக்கணங் கூறுகின்றது.

60. முடிவுபெருமை அந்நுவயதிருட்டாந்தமும் வெதிரேகதிருட்டாந்தமும் இல்லாதது: அது 'எல்லாப் பொருளும் அநித்தம், அளவையான் அளக்கற்பாலதாகலின்' என்பது, ஈண்டு முழுவதும் பக்கமாயிருத்தலின், திருட்டாந்தமில்லை.

முடிவுபெருமை. எ-து. முடிவுபெருமையநைகாந்திகத்தினிலக்கணங் கூறுகின்றது.

61. இனித் துணிபொருள் இல்லாவிடத்து வியாபித்திருக்கும் ஏது விருத்தமென்னும் ஏதுப்போலி: அது 'சத்தம் நித்தியம், காரியம்பாட்டால்' எனவரும், காரியப்பாடு நித்தியமல்லா அழிபொருளில் வியாபித்திருப்பதாகலின் என்க.

இனித் துணிபொருள். எ-து. விருத்தத்தினிலக்கணங் கூறுகின்றது.

62 துணிபொருட்கு மறுதலையாகிய துணிந்தபொருளைச் சாதிக்கும் வேறோரேதுவினையுடைய ஏது சற்பிரதிபக்கமென்னும் ஏதுப்போலி: அது 'சத்தம் நித்தியம், செவிக்குப் புலனாதலின், சத்தத்தன்மைபோலும்' 'சத்தம் அநித்தியம்' காரியப்பாட்டால், 'குடம்போலும்' என வரும்.

துணிபொருட்கு. எ-து. சற்பிரதிபக்கவிலக்கணங்கூறுகின்றது.

63. இனி அசித்தமென்னும் ஏதுப்போலி சார்பசித்தம், உருவசித்தம், வியாப்பியத்தன்மையசித்தம் என மூவகைப்படும்.

இனி அசித்தம். எ-து. அசித்தத்தைப் பகுக்கின்றது.

64. அவற்றுள், சார்பசித்தமாவது 'ஆகாயத்தாமரை மணமுடைத்து, தாமரைத்தன்மையால், பொய்கைத்தா

மரைபோலும்' என வரும். ஈண்டு மணமுடைமைக்கு ஆகாயத்தாமரை சார்பு, அதுவே இல்லை.

அவற்றுள், சார்பு. எ-து. சார்பசித்தத்திற்குதாரணங் கூறுகின்றது.

65. உருவசித்தமாவது சொரூபாசித்தம்: அஃதெங்ஙனம், 'சத்தம் குணம், கண்ணுக்குப் புலனாதலின்' என வரும். ஈண்டுக் கட்புலனாதல் சத்தத்திற்கின்று, சத்தம் செவிக்குப் புலனாதலின்.

உருவசித்தம். எ-து. உருவசித்தத்திற்கு உதாரணங் கூறுகின்றது.

66. வியாப்பியத்தன்மை யசித்தமாவது செயற்கையோடு கூடிய ஏது. செயற்கை சாத்தியத்தில் வியாபித்து ஏதுவில் வியாபியாதது. சாத்தியத்தில் வியாபித்தல் சாத்தியப்பொரு ளிருக்குமிடத்தின்கணுள்ள முழுதுமபாவத்திற்கு எதிர்மறையாகாமை. ஏதுவில் வியாபியாமை ஏதுவிருக்குமிடத்தின்கணுள்ள முழுதுமபாவத்திற்கு எதிர்மறையாதல். 'இம்மலை புகையுடைத்து, தீயுடைமையால்' என்புழி ஈரவிறகின்கூட்டம் செயற்கை. அது 'யாண்டுப் புகையுண்டு ஆண்டு ஈரவிறகின் கூட்டமுண்டு' எனச் சாத்தியப்பொருளில் வியாபகமாயும், 'யாண்டுத் தீயுண்டு ஆண்டு, ஈரவிறகின் கூட்டமின்று, ஒழுக்காய்ச்சிய இரும்பில் ஈரவிறகின்மையின்' என ஏதுவில் வியாபகமின்றியும் இருத்தலின், ஈரவிறகின்கூட்டம் உபாதி. அவ்வுபாதியுடைமையின் வன்னியுடைமையாகிய ஏது வியாப்பியத்தன்மையசித்தம்.

வியாப்பியத்தன்மை. எ-து. வியாப்பியத்தன்மையசித்தத்தினிலக்கணங் கூறுகின்றது.

செயற்கை. எ-து. செயற்கையிலக்கணங் கூறுகின்றது. செயற்கை துணிபொருளெல்லாவற்றினும் வியாபிப்பதும், பக்கதருமத்தான் வரைந்து கொள்ளப்படுந் துணிபொருளின் வியாபிப்பதும், ஏதுவான் வரைந்துகொள்ளப்படுந் துணிபொருளின் வியாபிப்பதும், யாதானுமோர் தருமத்தான் வரைந்துகொள்ளப்படுந் துணிபொருளின் வியாபிப்பதும் என நான்குவகைத்து. அவற்றுள், முதலது ஈரவிறகின் கூட்டம். இரண்டாவது 'வாயுக் காட்சிப்பொருள், அளவையான் அளக்கற்பாலதாகலின்' என்பது. ஈண்டுப் புறப்பொருண்மையான் வரைந்துகொள்ளப்படுங் காட்சிப்பொருளின் வியாபிப்பது உற்பூத உருவமென்க. மூன்றாவது 'அழிவுபாட்டபாவம் நாசமுடைத்து, உண்டாகற்பாலதாகலின்' என்பது. ஈண்டு உண்டாகற்பாலதாந்தன்மையான் வரைந்துகொள்ளப்படும் நாசமுடைமையின்வியாபிப்பது பாவத்தன்மை. நான்காவது 'முன்னபாவம் நாசமுடைத்து, அளவையான் அளக்கற்பாலதாகலின்' என்பது. ஈண்டு உண்டாகற்பாலதாந்தன்மையான் வரைந்துகொள்ளப்படும் நாசமுடைமையின் வியாபிப்பது பாவத்தன்மையெனக் கொள்க.

67. தன்னாற் சாதிக்கப்படும் பொருளினதபாவம் மற்றோரளவையாற் றுணியப்படின் அது பாதிதமென்னும் ஏதுப்போலி: அது 'நெருப்புச் சூடில்லது, திரவியமாதலின்' எனவரும். ஈண்டுச் சூடின்மை, சாத்தியம், அதனபாவமாகிய சூடு துவக்கிந்திரியக் காட்சியான் அறியப்படுதலின் இது பாதிதமாயிற்று. அனுமானம் உரைக்கப்பட்டது.

தன்னால். எ-து. பாதிதத்தினிலக்கணங் கூறுகின்றது.

அனைகாந்திகம், விருத்தம், சற்பிரதிபக்கம், அசித்தம், பாதிதமென்பவற்றைப் பிறழ்வுடையது, மாறுகொள்வது, மறுதலையுடையது, பேறில்லது, மறுப்புடையது என மொழிபெயர்த்துக்கொள்க.

இவற்றுள், பாதிதம் கொள்ளற்பாலதன் அபாவத்தை நிச்சயித்தலானும், சற்பிரதிபக்கம் மறுதலைப்பொருளுணர்விற்குக்

கருவியாகலானும், அனுமிதிக்கே தடையாவனவாம். ஏனையவை ஆராய்ச்சிக்குத் தடையாய் இருந்துகொண்டே அனுமிதிக்குத் தடையாவனவாம். அவற்றுள்ளும் பொதுவனைகாந்திகம் பிறழாமையின்மையானும், விருத்தம் ஒருநிலைக்களத்துளதாகலின்மையானும், வியாப்பியத்தன்மையசித்தம் விசேடணம் அடுத்த வியாத்தியின்மையானும், சிறப்பனைகாந்திகமும் முடிவுபெறுமையும் வியாத்திக்கண் ஐயந்தோற்றுவித்தலானும், வியாத்தியுணர்விற்குத் தடை, சார்பசித்தமும் உருவசித்தமும் பக்கதருமத்தன்மையுணர்விற்குத் தடையெனத் தெரிந்துகொள்க. செயற்கை பிறழ்சியுணர்வின் வழியானே வியாத்தியுணர்விற்குத் தடை. துணிந்ததனைத் துணிவிப்பதாகிய சித்தசாதனம் பக்கதருமத்தன்மையைச் சிதைத்தலாற் சார்பசித்தத்துள் அடங்கும். தோல்வித்தானத்துள் அடங்குமென்பர் நவீனர்.

உவமானப்பிரமாணம்

68. உவமானம் உவமிதியறிவிற்குக் காரணம். உவமிதி பெயர்க்கும் பெயர்ப்பொருட்குமுள்ள சம்பந்தம் அறியுமறிவு. அதற்குக் காரணம் ஒப்புமையறிவு. அஃதெங்ஙனமெனின், ஆமா என்னுஞ் சொற்குப்பொருளுணராதான் ஒருவன் 'ஆவினையொக்கும் ஆமா' என ஓராண்மகன் கூறக்கேட்டுக் காட்டகம் புக்கானாக; அவன் கூறிய தொடர்மொழிப்பொருளைக் கருதி ஆவொப்புமையடுத்த பிண்டத்தைக் கண்ட பின்னர் 'இது ஆமா' என்னும் உவமிதியறிவு தோன்றுமென்க. உவமானம் உரைக்கப்பட்டது.

உவமானம். எ-து. உவமானத்தினிலக்கணங் கூறுகின்றது.

உவமிதி. எ-து. உவமிதியினிலக்கணங் கூறுகின்றது.

சத்தப்பிரமாணம்

69. சத்தப்பிரமாணம் ஆத்தன்வாக்கியம். ஆத்தன் உரியோன் என்பன ஒருபொருட்கிளவி. ஆத்தனாவான் உண்மைப்பொருளைக் கூறுவான். வாக்கியம் பதங்களின் கூட்டம்: அது 'ஆவைக் கொணா' என்பன முதலியவாம். பதமாவது ஆற்றலுடையது. ஆற்றல் 'இப்பதத்தால் இப்பொருளுணர்த்துக' என்னும் இறைவன் சங்கேதம்.

சத்தப்பிரமாணம். எ-து. சத்தப்பிரமாணத்திலக்கணங் கூறுகின்றது.

ஆத்தன். எ-து. ஆத்தன் இன்னன் என்கின்றது.

வாக்கியம். எ-து. வாக்கியமின்னதென்கின்றது.

பதம். எ-து. பதத்தினிலக்கணங் கூறுகின்றது.

ஆற்றல். எ-து. பொருணினைவு நிகழ்தற்கு அனுகூலமாய பதங்கட்கும் பதார்த்தங்கட்கும் உளதாய சம்பந்தம் ஆற்றலெனவும் அது வேறுபதார்த்தமெனவும் சைமினிமதநூலார் கூறுப, அதனை மறுத்து ஆற்றலின்னதென்கின்றது. ஆதன் பூதன் முதலியவற்றிற்குப்போலக் குடமுதலிய பதங்கட்கும் சங்கேதமே ஆற்றலாகலின், அது வேறுபதார்த்தமென்பது பொருந்தாதென்பதாம். ஆ முதலிய பதங்களாற் சாதியே முன்னர்க் கருதப்படுதலின் பதங்கட்குச் சாதியின்கண்ணே ஆற்றலெனவும், பொருட்பெறுதி கடா முதலியவற்றால் நிகழுமெனவும் கூறுவாருமுளர். அது பொருந்தாது, 'ஆவைக் கொணா' என்றற்றொடக்கத்து முதியோர்வழக்கின்கண் யாண்டும் கொணர்தல் முதலியன பொருளின்கண்ணே நிகழக் காண்டலிற் சாதியடுத்த பொருளின்கண்ணே ஆற்றலென்பதே பொருத்தமுடைத்தாகலின். ஆற்றலுணருமாறு முதியோர் வழக்காற்றுணியப்படும்: அங்ஙனமன்றே, சொற்பொருளுணர்தல் வேட்கையுடையானோரிளையோன் 'ஆவைக் கொணா' என முதியோன் கூறுந் தொடர்மொழியைக் கேட்ட பின்னர், இடைப்பட்ட முதியோன் முயலுந்தொழிலை நோக்கி, ஆவைக்கொணர அதனையுங்கண்டு, இடைப்பட்ட முதியோன் முயலுந் தொழில் நிகழ்தற்குக் காரணமாகிய ஞானம் உடன்பாட்டானும் மறையானுந் தொடர்மொழியாற்றோற்றற்பாலதெனத் தெளிந்து, 'குதிரையைக் கொணா' 'ஆவைக் கட்டு'

என்னும் வேறுதொடர்மொழிக்கண் முன்னும் பின்னும் உற்று நோக்கி, ஆவென்னும் பதத்திற்கு ஆத்தன்மையடுத்த பிண்டத்தின்கண் ஆற்றல், குதிரையென்னும் பதத்திற்குக் குதிரைத் தன்மையடுத்த பிண்டத்தின்கண் ஆற்றல் எனச் சொற்பொருளுணர்ந்துகொள்ளுமென்க. அஃதங்ஙனமாக, வழக்கமனைத்தும் யாண்டும் காரியப்பொருட்டாகலின், காரியப்பொருட்டு நிகழுந் தொடர்மொழிக்கண்ணே சொற்பொருள் உணரப்படுமன்றி நிகழ்ந்ததன்மேற்றாய தொடர்மொழிக்கட் சொற்பொருளுணர்ச்சி நிகழாதாலெனின்;—அற்றன்று, 'கூடலின்கண் முதுகுடுமிப் பெருவழுதியுளன்' என்றற்றொடக்கத்து நிகழ்ந்ததன்கண்ணும் வழக்கமுண்மையானும், 'மலர்ந்த தாமரைக்கண் வண்டுளது' என்றற்றொடக்கத்து யாண்டும் உணரப்படும் பதத்தினைச் சார்த்தி வழங்குதலான் நிகழ்ந்ததன்கண்ணும் வண்டு முதலியவற்றின் சொற்பொருளுணர்வு நிகழக் காண்டலானும், என்க.

இலக்கணையும் சத்தத்தின்கணுள்ளது. ஆற்றலுடைத்தாகற்பாலதன் சம்பந்தம் இலக்கணை: அது 'கங்கையின்கணிடைச்சேரி' என்பது. ஈண்டுக் கங்கையென்னுஞ் சொற்குப் பொருளாகிய வெள்ளத்தின் சம்பந்தத்தானே கரையென்பது உணரப்படுமாகலின், கரையின்கண்ணும் ஆற்றலுடைத்தென்றல் வேண்டாமையுணர்க. மா முதலிய பதங்கட்காயின் மாமரத்திற்கும் குதிரைக்கும் ஒன்றற்கொன்று சம்பந்தமின்மையின், ஆண்டு வெவ்வேறாற்றல் வேண்டற்பாலனவாம். அவ்விலக்கணை விட்டவிலக்கணையும், விடாதவிலக்கணையும், விட்டுவிடாதவிலக்கணையுமென மூவகைத்து. சொல்லின் பொருட்குக் கொண்டுகூட்டில்லாதவிடத்து விட்டவிலக்கணை: அது 'கட்டில் கரைகின்றது' என்பது. சொல்லின் பொருட்கும் கொண்டு கூட்டுள்ளவிடத்து விடாதவிலக்கணை: அது 'கவிகையாளர் செல்கின்றார்' என்பது. சொற்பொருளின் ஏகதேசத்தைவிட்டு ஏகதேசத்திற்குக்கொண்டுகூட்டுள்ளவிடத்து விட்டுவிடாதவிலக்கணை: அது 'அது நீயாகின்றாய்' என்பது. 'குன்றமியானை' என்றாற்போல உருவகமுதலியனவும், குறிக்கப்படுங் குணத்தின் சம்பந்தத்தான் உணரப்படுதலின், இலக்கணையேயாம். குறிப்பும் ஆற்றல் இலக்கணை

என்னுமிவற்றுள் அடங்கும். பொருளாற்றலால் உணரப்படுங் குறிப்பு அனுமானமுதலியவற்றான் வேறோராற்றாற் பெறப்படுவது. தாற்பரியவுணர்வு நிகழாமை இலக்கணைக்குக் காரணம். தாற்பரியம் அவ்வப்பொருளுணர்ச்சிவிருப்பான் உச்சரிக்கப்படுந் தன்மை. வெவ்வேறுபொருள் பயத்தலின், தாற்பரியவுணர்வும் தொடர்மொழிப் பொருளுணர்ச்சிக்குக் காரணம். தாற்பரியத்தை உணர்விப்பது வினை, சார்பு, இடமுதலியனவெனவறிக. "பிறவிப் பெருங்கட னீந்துவர்" என்புழிச் 'சேர்ந்தார்' என்பது சொல்லெச்சம். அற்றேல், சொற்களெல்லாம் பொருளுணர்தற்பொருட்டாகலிற் பொருளுணர்ந்தன்றிச் சொல்வருவிக்கலாகாமையிற் பொருளெச்சமென்றலே பொருத்தமுடைத்தெனின்;—அற்றன்று, சொல்விசேடத்தாற்றோன்றற்பாலதாய சொற்பொருளுணர்ச்சியே சொல்லுணர்ச்சிக்கேதுவாகலின். அவ்வாறு கொள்ளாக்கால், 'குடம் செயப்படுபொருண்மை கொணர்தல் வினைமுதற்றன்மை' என்றவழிக் 'குடத்தைக் கொணர்ந்தான்' என்னுஞ் சொல்லாற் பெறப்படுமுணர்ச்சி நிகழ்தல் வேண்டுமென்பது. பங்கயமுதலிய சொற்களின் அவயவவாற்றல் காரணமும் பொதுவாற்றல் இடுகுறியும் விளக்குதலின், இன்னோரன்னவை காரணவிடுகுறியென்க. நியதமாய்த் தாமரையுணர்வே நிகழ்தற்பொருட்டுப் பொதுவாற்றலும் வேண்டப்பட்டது, அல்லாக்காற் குவளைமுதலியவற்றையும் பங்கயமெனல்வேண்டுதலின். பிரபாகரமதநூலார் மற்றொன்றனோடு கொண்டுகூட்டுதற்கண் ஆற்றலென்பர். கௌதமமதநூலார் கொண்டுகூட்டுதல் தொடர்மொழிப் பொருளின்றன்மையாக உணரப்படுதலின், கொண்டுகூட்டுங் கூற்றின்கண்ணே ஆற்றல் கொள்ளற்பாலதன்றென்பர்.

70. வாக்கியப் பொருளுணர்விற்குக் காரணம் அவாய் நிலையும், தகுதியும், அண்மையுமாம்.

அவாய்நிலையும் தகுதியும் அண்மையும். எ-து அவற்றின் ஞானமென்றவாறு.

71. அவாய்நிலை ஒருபதம் தன்னை முடிப்பதொரு பதம் இல்லாதவழி முடிவுபெறாது நிற்றல். தகுதி

பொருட்கு வாதையின்மை. அண்மை பதங்களை ஒரு தொடராக விரையக் கூறுதல்.

அவாய்நிலை. எ-து. அவாய்நிலையிலக்கணங் கூறுகின்றது.

தகுதி. எ-து. தகுதியிலக்கணங் கூறுகின்றது

அண்மை. எ-து. அண்மையிலக்கணங் கூறுகின்றது. சொல்லின் பொருளுணர்ச்சி விரையத் தோன்றுதல் அண்மையென்றவாறு. உச்சரித்தலும், அதனைப் பயப்பிப்பதாகலின், அண்மையெனப்பட்டது.

72. அவாய்நிலை முதலிய மூன்றும் இல்லாத வாக்கியம் பிரமாணமன்று. 'ஆகுதிரை ஆண்மகன் யானை' எ-து. அவாய்நிலையின்மையாற் பிரமாணமன்று. 'தீயானனை' எ-து. தகுதியின்மையாற் பிரமாணமன்று. 'ஆவைக் கொணா' என்றன் முதலியன, ஒருதொடராகக் கூறாது யாமத்துக்கு ஒன்றொன்றாகக் கூறின் அண்மையின்மையால் பிரமாணமன்று

ஆ குதிரை. எ-து. அதற்கு உதாரணங் கூறுகின்றது. 'குடம் செயப்படுபொருண்மை கொணர்தல் வினைமுதற்றன்மை' எ-து. அவாய்நிலையின்மைக்கு உதாரணமெனக் காண்க.

73. இத்தொடர்மொழி வேதவாக்கியம், உலகவாக்கியம் என இருவகைப்படும். வேதவாக்கியம் இறைவன் வாய்மொழியாகலான் எல்லாம் பிரமாணமேயாம். உலகவாக்கியத்தின் உரியோன் வாய்மொழி பிரமாணம், ஏனையது அப்பிரமாணம்.

வேதவாக்கியம். எ-து. வேதவாக்கியத்துக்கு விசேடங் கூறுகின்றது வேதம் அநாதியாயுண்மையின் இறைவன் வாக்கியமென்றதென்னையெனின்;— அற்றன்று, வேதம் புருடனாற் செய்யப்பட்டது, வாக்கியத்திரட்சியாயிருத்தலின், பாரதமுதலியவற்

றின் வாக்கியம் போலும் எனவறிக. இவ்வனுமானத்திற்குக் கருத்தாவுண்மை நினைக்கப்படுதல் செயற்கையாம் பிறவெனின்;- கௌதமர் முதலியோரால் மாணாக்கர் பரம்பரையின் வேதத்திற்குங் கருத்தாவுண்மை நினைக்கப்படுதலின் ஏதுவினும் வியாபித்தலின் ஆகாதென்க. "அவனிடத்தினின்றும் வேதமூன்றும் பிறந்தன" என்னுஞ் சுருதியுண்மையும் உணர்க. அற்றேல், 'இஃது அந்தக்ககரம்' என முன்னதனுணர்வே நிகழ்தலின் எழுத்துக்களெல்லாம் நித்தமாதல் பெற்றாம், பெறவே, வேதம் அநாதியென்றாற்படுமிழுக்கென்னையெனின்:—அன்றன்று, 'ககரம் தோன்றிற்று' 'ககரம் அழிந்தது' என்னுமுணர்வு நிகழ்தலான் எழுத்துக்களெல்லாம் அநித்தமாதல் பெறப்பட்டமையின், 'இஃதந்தக்ககரம்' என முன்னதனுணர்வு நிகழ்தல் 'இஃதந்த விளக்கின் சுடர்' என்பதுபோல அதன்சாதிபற்றியென்க. எழுத்துக்களை நித்தமெனக் கொள்ளினும் தொடர்ப்பாடாகக் கோவைப்படும் வாக்கியம் அநித்தமேயாம். ஆதலான், வேதம் இறைவன் வாய்மொழியேயெனக் கொள்க. மனு முதலிய மிருதி நூல்களும், ஒழுக்கமும், வேதத்தை முதனூலாகவுடைமையின் பிரமாணமேயாம். மிருதிக்கு முதனூலாகிய வேதவாக்கியம் இக்காலத்து ஓதுவாரின்மையின் மிருதிக்கு முதனூலாயுள்ளதொருசாகை இறந்ததென்று கொள்ளற்பாற்று. இக்காலத்து வழங்கப்படும் வேதவாக்கியம் முதனூலாமெனக் கோடல் பொருந்தாமையின், என்றும் அனுமித்தறியற்பாலதோர் வேதம் முதனூலாக உண்டெனின்;- அது பொருந்தது, அவ்வாறுண்டாயினும் எழுத்துக்களின்றொடர்ப்பாட்டுணர்வு பிறவாமையின், உணர்வாரின்மையானென்க. அற்றேல், 'இப்பதங்கள் நினைப்பிக்கப்படும் பொருட்சம்பந்தமுடையன, அவாய்நிலை முதலியவற்றையுடைய சொற்றிரட்சியாகலின், நம்மனோர் வாக்கியம்போலும்' என்னும் அனுமானத்தானேயாண்டும் உணர்வு நிகழ்தலிற் சத்தம் வேறு பிரமாணமன்றெனின்;— அற்றன்று, சத்தவுணர்வு அனுமிதியுணர்விற்குவேறாய இலக்கணமுடைத்தென்பதற்குச் 'சொல்லானறிந்தேன்' எனப் பின்னிகழுமுணர்வே சான்றாதல் எல்லார்க்கும் ஒப்ப முடிந்ததாகலின்.

இனிப் 'பகலுண்ணான் சாத்தன் பருத்திருப்பன்' எனக் கண்டாயினுங் கேட்டாயினும் உணர்ந்தவழிப் பருமை வேறோராற்றாலாகாமையின் இரவுண்டல் பொருளாற் கொள்ளப்படுமாகலின், அருத்தாபத்தியும் வேறு பிரமாணமாமாலோவெனின்,— அற்றன்று, 'சாத்தன் இரவுண்பன், பகலுண்ணானாயும் பருத்திருத்தலின்' என்னும் அனுமானத்தானே இரவுண்டல் பெறப்படுதலினென்க. 'நூற்றில் ஐம்பதுண்டு' என்னும் உண்மையும் அனுமானமேயாம். 'இவ்வாலிற் பேயுண்டு' என்னும் ஐதிகமும் அறியப்படாததன்மேற்றாகிய சத்தப்பிரமாணமே. கை முதலியன அசைத்தலாகிய சேட்டையும், சத்தானுமானத்தின் வழியானே வழக்கிற்கு எதுவாகலின், வேறு பிரமாணமன்று. ஆதலால், காட்சி, கருதல், ஒப்பு, உரையெனக் கூறப்பட்ட நான்குமே பிரமாணமெனக் கொள்க.

இனி ஞானங்கள், அதனையுடையதன்கண் அது விசேடணமாகத் தோன்றுதல் தன்னாலுணர்தற்பாலதோ பிறிதானுணர்தற்பாலதோவென்று, ஆராயத் தக்கன. ஈண்டு ஞானம் பிரமாணமாதல் அது பிரமாணமாதலின்மையைக் கவராது எல்லாஞானங்களையும் கவருங்கருவியாற் கவரற்பாலதோ அன்றோ என்பது ஐயப்பாடு. இவ்விரண்டனுள், முன்னையது தன்னாலுணர்தற்பாலதாதல். பின்னையது பிறிதானுணர்தற்பாலதாதல். அனுமானத்தாற் கவரற்பாலதாகலான் துணிந்ததனைத் துணிதலென்னுங்குற்றம் வாராமல் நீக்குதற்பொருட்டு 'எல்லாம்' என்றும், இவ்வுணர்வு மெய்யனுபவமன்றென்னும் ஞானத்தாற் பிரமாணமாதல் கவரப்படாமையின் ஆண்டு மறுப்பு வாராமை நீக்குதற்குப் 'பிரமாணமாதலின்மையைக் கவராது' என்றும், இவ்வுணர்வு மெய்யனுபவமன்றெனப் பின்னிகழுமுணர்வு பிரமாணமாதலைக் கவருங் கருவிக்குப் பிரமாணமாதலின்மையைக் கவருந்தன்மை இன்மையால் தன்னாலாதல் இன்றாய் முடியும், அதனை நீக்குதற்கு 'அது' என்றும், கூறியவாறு. அது பிரமாணமாதலின்மையைக் கவராதென்றது பிரமாணமாதற்குச் சார்பாயுள்ளது பிரமாணமாதலின்மையைக் கவராதென்றவாறு. எடுத்துக்காட்டிய உதாரணத்தின்கண் முந்திய முயற்சியிற் பிரமாணமாதலின்மை

யைக் கவர்வது பின்முயற்சியின் அதனைக் கவராமையின், தன்னாலாதல் பெறப்படும். அற்றேல், 'குடத்தை யான் காண்கின்றேன்' என்னும் பின்னிகழ்ச்சிக்குக் குடமும் குடத்தன்மையும் போல அவற்றின் சம்பந்தமும் விடயமாகலின் முயற்சிவடிவாகிய சம்பந்தம் ஒப்ப நிகழ்தலின் முன்னர்த் தோன்றும் உருவின் விசேடணத்தின் சம்பந்தமே மெய்யனுபவத்தன்மையாகிய பதார்த்தமாகலிற் பிரமாணமாதல் தன்னாலே உணரப்படுமாலோ வெனின்;—அற்றன்று, பிரமாணமாதல் தன்னாலுணர்தற்பாலதாயின் புனலுணர்வு தோன்றியது மெய்யோ அன்றோவெனப் பயிலாத காலத்து மெய்யனுபவத்தன்மைக்கண் ஐயப்பாடின்றாதல் வேண்டும், பிரமாணமாதல் பின்முயற்சியாற்றெளியப்படுதலான். முன்னர் ஐயப்பாடுண்மை பெறப்படுதலின், தன்னாலுணர்தற்பாலதாதலின்மையால் பிறிதாலுணர்தற்பாலதேயாம்; அங்ஙனமன்றோ, முதற்கட்புனலுணர்வு தோன்றியபின்னர் முயன்று சென்றுழிப் புனல்கிடைத்ததாயின், முன்னர்த் தோன்றிய புனலுணர்வு மெய்யனுபவம், முயன்று சென்றது பயப்படச் செய்தலின். 'யாது மெய்யனுபவமன்று அது பயப்படச்செய்யாது, பொய்யனுபவம்போலும்' என்னுங்கேவலவெதிரேகியனுமானத்தான் மெய்யனுபவத்தன்மை தெளியப்படும். இரண்டாவது நிகழ்வது முதலிய ஞானங்களின் முன்னைஞானம் திருட்டாந்தமாதல் உண்மையான், அதன்சாதியுடைமையாகிய இலிங்கத்தானே அந்நுவயவெதிரேகியனுமானத்தானுந் தெளியப்படும். மெய்யனுபவத் தோற்றத்தின்கட் பிறிதானாதல் குணத்தாலுண்டாதற்பாலதாதல். மெய்யனுபவத்திற்குச் சிறந்தகாரணம் குணம், பொய்யனுபவத்திற்குச் சிறந்த காரணம் குற்றம், அவற்றுள், காட்சிபுணர்விற்கட் குணம் விசேடணத்தையுடைய விசேடியத்தின் சம்பந்தம், அனுமிதிக்கட்குணம் வியாபகமுடையதன்கண் வியாப்பியமென்னுமுணர்வு, உவமிதிக்கட்குணம் மெய்யான ஒப்புமையுணர்வு, சத்தவுணர்வின்கட்குணம் மெய்யான தகுதி முதலியவற்றினுணர்வு என்னுமின்னோரன்ன பிறவும் ஆராய்ந்துணர்ந்து கொள்க. முன்னர்த் தோன்றாநின்ற உருவிற்பிரகாரமின்மை முன்முயற்சியினுணரப்படாமையின், பொய்யனுபவமாதல் பிறிதானுணர்தற்பாலதேயாம். தோற்றத்தின்கட்பிறிதானாதல் பித்த

முதலிய குற்றத்தான் உண்டாகற்பாலதாதல். அற்றேல், பொய்யுணர்வென்பதே இல்லை அனைத்துணர்வும் மெய்யாகலின், இப்பியின்கண் 'இது வெள்ளி' என்னுமுணர்வான்முயற்சிநிகழக்காண்டலின் மலைவுண்டு என்பது கூடாது. வெள்ளியினினைவும் முன்னர்த்தோன்றா நின்றதனுணர்வும் என்னும் இரண்டானுமே முயற்சி நிகழ்தல் கூடுமாகலின், முன்னர்த் தோன்றியதன்கண் வேறுபாடு தோன்றாமையே யாண்டும் முயற்சி பிறப்பித்தலான், 'இது வெள்ளியன்று' என்பது முதலியவற்றின் மிகைப்பாடின்மையான் எனின்;—அற்றன்று, மெய்யாகிய வெள்ளியிடத்து முன்னர்த் தோன்றாநின்றது விசேடியமாகவும் வெள்ளித்தன்மை விசேடணமாகவும் உடையஞானம் முயற்சியைப் பிறப்பிக்குமென நொய்திற்கோடல் பொருத்தமுடைத்தாகலின், இப்பியின் ஈண்ணும் வெள்ளியின் விழைவானே முயற்சியைப் பிறப்பிப்பதாகலின் அடையடுத்த ஞானமே கொள்ளற்பாற்றாகலானென்க.

74. வாக்கியப்பொருளுணர்ச்சி சத்தத்தாலாயவுணர்ச்சி; அதற்குக் காரணம் சத்தம். இங்ஙனம் மெய்யனுபவம் தெரித்துரைக்கப்பட்டது.

75. இனிப் பொய்யனுபவம் ஐயம், திரிவு, தருக்கம் என்னும் வேறுபாட்டான் மூவகைத்து.

இனிப் பொய்யனுபவம். எ-து. பொய்யனுபவத்தைப் பகுக்கின்றது. கனவு மானதக்காட்சித்திரிபாகலின், மூவகைமையின் மாறுபாடின்மையுணர்க.

76. அவற்றுள், ஐயமாவது ஒருதருமியின் மாறுபட்ட பல தருமங்களான் விசேடிக்கப்பட்டவுணர்வு. தருமமெனினும் தன்மையெனினும் ஒக்கும். அது 'குற்றியோ மகனோ' என்பது.

அவற்றுள், ஐயம். எ-து. ஐயவிலக்கணங் கூறுகின்றது, 'புலிவிற்கெண்டை' எனத்திரட்சிபற்றியதன்கண் அதிவியாத்தி நீக்குதற்கு 'ஒருதருமியின்' என்றும், 'குடந்திரவியம்' என்பது முதலிய

வற்றின் குடத்தன்மை திரவியத்தன்மை எனப் பலதன்மை உண்மையின் ஆண்டதிவியாத்தி நீக்குதற்கு 'மாறுபட்ட' என்றும், 'ஆடைத்தன்மையின் மாறுபட்ட குடத்தன்மையுடையது' என்பதன்கண் அதிவியாத்தி நீக்குதற்குப் 'பல' என்றும், கூறியவாறு.

77. திரிவு மித்தையினாலாய உணர்வு: அது இப்பியை வெள்ளியென்பது.

திரிவு. எ-து. திரிவிலக்கணங் கூறுகின்றது. அஃதில்லாததன்கண் அதுவிசேடணமாதலுடைமை நிச்சயித்தலென்றவாறு.

78. தருக்கம் வியாப்பத்தை ஆரோபித்தலான் வியாபகத்தை ஆரோபிப்பது; அது 'தீயில்லையாகில் புகையுமில்லையாதல் வேண்டும்' என்பது.

தருக்கம். எ-து. தருக்கத்தினிலக்கணங் கூறுகின்றது. தருக்கம், திரிவினுளடங்குமாயினும், பிரமாணத்திற்கு உபகாரமாதலான், வேறு கூறப்பட்டது.

79. நினைவு மெய், பொய் என இருவகைத்து. மெய்யனுபவத்தாற் றோன்றிய நினைவு மெய். பொய்யனுபவத்தாற்றோன்றிய நினைவு பொய். புத்தி உரைக்கப்பட்டது.

நினைவு. எ-து. நினைவைப் பகுக்கின்றது.

80. சுகம் எல்லார்க்கும் நலமாக உணரப்படுவது.

சுகம். எ-து. இன்பத்தினிலக்கணங் கூறுகின்றது. 'இன்பமுடையோன் யான்' என்றற்றொடக்கத்துப் பின்னிகழ்ச்சியாற் குறித்துணரப்படும் இன்பத்தன்மை முதலியனவுடைமையே இலக்கணமென்க. ஈண்டுக் கூறியது சொரூபமென்க.

81. துக்கம் எல்லார்க்கும் தீங்காக உணரப்படுவது.

82. இச்சை காமம்.

83. வெறுப்பு வெகுளி.

84. முயற்சி தொழில்.

85. தர்மம் விதிவினையாற்றோன்றியது.

86. அதர்மம் விலக்குவினையாற்றோன்றியது.

87. புத்தி முதலிய எட்டும் ஆன்மாவிற்கே உரிய குணங்கள். புத்தி, இச்சை, முயற்சி என்னும் மூன்றும் நித்தமும் அநித்தமுமாம். இறைவனுடைய புத்தி முதலிய மூன்றும் நித்தம், உயிருடைய புத்தி முதலிய மூன்றும் அநித்தம்.

88. வாசனை வேகமும், பாவனையும், நிலைபெறுத்துகையும் என மூவகைத்து.

வாசனை. எ-து. வாசனையைப் பகுக்கின்றது. வாசனைத் தன்மையாகிய சாதியுடைமை வாசனையிலக்கணம்.

89. அவற்றுள், வேகம் பிருதிவிமுதலிய நான்கினும் மனத்தினும் இருக்கும்.

அவற்றுள், வேகம். எ-து. வேகத்திற்குப் பற்றுக்கோடு கூறுகின்றது. வேகத்தன்மைச்சாதியுடையது வேகம்.

90. பாவனை அனுபவத்தின் காரியமாய் நினைவிற்குக் காரணமாயுள்ளது. அது ஆன்மாவின்மாத்திரம் இருக்கும்.

பாவனை. எ-து. பாவனையிலக்கணங் கூறுகின்றது. ஆன்மா முதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'அனுபவத்தின் காரியம்' என்றும், அனுபவத்தின் அழிவுபாட்டின் அதிவியாத்தி நீக்குதற்கு 'நினைவிற்குக் காரணம்' என்றுங் கூறியவாறு. நினைவே வாசனைக்குக் காரணமென்பர் நவீனர்.

91. நிலைபெறுத்துகை வேறுதன்மையாகச் செய்யப்பட்டது மீட்டும் அந்நிலையேயாக்குவது. அது பாய் முதலிய பிருதிவியினிருக்கும். குணம் கூறப்பட்டது.

நிலைபெறுத்துகை எ-து. நிலைபெறுத்துகையினிலக்கணங் கூறுகின்றது. எண்ணல் முதலிய எட்டும், நிமித்தத்தானாய நெகிழ்ச்சியும், வேகமும், நிலைப்பெறுத்துகையும் பொதுக்குணங்கள். ஏனையுருவ முதலியன விசேடகுணங்கள். திரவியத்தைப் பகுக்கும் உபாதியிரண்டின் ஒருநிலைக்களத்து இராத சாதியுடைமை விசேடகுணத்தன்மை.

3. கருமம்

92. கருமம் புடைபெயர்ச்சி. கருமமைந்தனுள், எழும்பல் மேலிடத்துக் கூடுதற்கேது. வீழ்தல் கீழிடத்திற் கூடுதற்கேது. வளைதல் உடல் வளைந்து கூடுதற்கேது. நிமிர்தல் நிமிர்ந்து கூடுதற்கேது. ஏனை யனைத்தும் நடத்தலெனப்படும். அது பிருதிவிமுதனான்கினும் மனத்தினும் இருக்கும்.

கருமம். எ-து கருமத்தினிலக்கணங் கூறுகின்றது.

கருமமைந்தனுள். எ-து. எழும்பல் முதலியவற்றின் காரிய வேறுபாடு கூறுகின்றது. உடலின்கண் மிகவுங்கோணலை உண்டாக்குவது வளைதல். செவ்விதாகலை உண்டாக்குவது நிமிர்தல்.

4. சாமானியம்

93. இனிச் சாமானியமாவது நித்தமாய், ஒன்றாய், பலவற்றின் ஒருங்குசேறலையுடைய சாதி. அது மேல், கீழ் என இருவகைத்து. திரவியம், குணம், கன்மம் என்னும் மூன்றினுமிருக்கும். இருவகையுள், உண்மைத்தன்மை மேற்சாதி, திரவியத்தன்மை முதலியன கீழ்ச்சாதி.

இனிச் சாமானியம். எ-து. சாமானியத்தினிலக்கணங் கூறுகின்றது. சையோகத்தின் அதிவியாத்தி நீக்குதற்கு 'நித்தம்' என்றும், பரமாணுவின் பரிமாணமுதலியவற்றின் அதிவியாத்தி

நீக்குதற்குப் 'பலவற்றின்' என்றும், கூறியவாறு. ஒருங்குசேறல் சமவேதமாதலென்பதாம். ஆகவே, அபாவமுதலியவற்றின் அதிவியாத்தியின்மை யுணர்க.

5. விசேடம்

94. இனி விசேடம் நித்தப்பொருள்களின் இருப்பனவாய், அவை வெவ்வேறாய் நிற்றலைத் தெரிப்பனவாம். நித்தப்பொருள்களாவன பிருதிவி முதலிய நான்கின் பரமாணுக்களும் ஆகாய முதலிய வைந்துமென வுணர்க.

இனி விசேடம். எ-து. விசேடத்தினிலக்கணங் கூறுகின்றது.

6. சமவாயம்

95. இனிச் சமவாயமாவது நித்தமாகிய சம்பந்தம். அது நீக்கமின்றி இருப்பனவற்றின்க ணிருக்கும். யாவை இரண்டனுள் ஒன்று மற்றொன்றனைப் பற்றியே நிற்கும் அவை நீக்கமின்றி யிருப்பன. அவை சினையும் முதலும், குணமும் குணியும், வினையும் வினைமுதலும், சாதியும் வடிவும், விசேடமும் நித்தியப்பொருளும் என்பன.

இனிச் சமவாயம். எ-து. சமவாயத்தினிலக்கணங் கூறுகின்றது. சையோகத்தின் அதிவியாத்தி நீக்குதற்கு 'நித்தம்' என்றும், ஆகாயமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குச் 'சம்பந்தம்' என்றும், கூறியவாறு.

யாவை. எ-து. நீக்கமின்றியிருத்தலினிலக்கணங் கூறுகின்றது. 'கரியது குடம் என்னும் அடையடுத்த வுணர்வு விசேடண விசேடியங்கட்கு உளதாகிய சம்பந்தத்தை விடயமாகவுடையது' அடையடுத்த உணர்வாகலின், குழையனென்னு முணர்வுபோலும், என்னும் அனுமானத்தால், சமவாயம் உண்மை பெறப்பட்டது.

சினையும் முதலும். எ-து. திரவியசமவாயிகாரணம் சினை. அதனால் உண்டாகற்பாலதாய திரவியம் முதலெனக் காண்க.

7. அபாவம்

96. அபாவம் நான்கனுள், முன்னபாவம் தோற்றமின்றி நாசமுடையது: அது காரியத்தோற்றத்திற்கு முன்னுள்ளது.

முன்னபாவம். எ-து. முன்னபாவத்தினிலக்கணங் கூறுகின்றது. ஆகாய முதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'நாசமுடையது' என்றும், குடமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குத் 'தோற்றமின்றி' என்றும், கூறியவாறு. முன்னபாவம், தன்னெதிர்மறைப் பொருளின் சமவாயி காரணத்தின்கண் இருந்து, எதிர்மறைப் பொருளைத் தோற்றுவிப்பதாய், 'தோன்றும்' என்னும் வழக்கிற்கு ஏதுவாயதாம்.

97. அழிவுபாட்டபாவம் தோற்றமுடையதாய், நாசமின்றியிருப்பது: அது காரியத்தோற்றத்தின் பின்னுள்ளது.

அழிவுபாட்டபாவம். எ-து. அழிவுபாட்ட பாவத்தினிலக்கணங் கூறுகின்றது. குடமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்கு 'நாசமின்றி' என்றும், ஆகாயமுதலியவற்றின் அதிவியாத்தி நீக்குதற்குத் 'தோற்றமுடைத்தாய்' என்றும், கூறியவாறு. அழிவுபாட்டபாவம், தன்னெதிர்மறையாற் றோன்றி, எதிர்மறையின் சமவாயிகாரணத்தின் இருப்பதாய், 'அழிந்தது' என்னும் வழக்கிற்கு ஏதுவாவதாம்.

98. முழுதுமபாவம் முக்காலத்தினும் உளதாய சமுசர்க்கத்தான் வரைந்துகொள்ளப்படும் எதிர்மறைத்தன்மையையுடையது: அது 'நிலத்திற் குடமில்லை' என்பதாம்.

முழுதுமபாவம். எ-து. முழுதுமபாவத்தினிலக்கணங் கூறுகின்றது. ஒன்றினொன்றபாவத்தின் அதிவியாத்தி நீக்குதற்குச் 'சமுசர்க்கத்தான் வரைந்து கொள்ளப்படும்' என்றும், அழிவுபாட்டபாவம் முன்னபாவங்களின் அதிவியாத்தி நீக்குதற்கு 'முக்காலத்தினும் உளதாய' என்றும், கூறியவாறு.

99. ஒன்றினொன்றபாவம் அதன்வடிவான் வரைந்த பொருளைப் பிரதியோகியாகவுடைய இன்மை: அது 'குடம் ஆடையன்று' எனா வரும்.

ஒன்றினொன்றபாவம். எ-து. ஒன்றினொன்றபாவத்தி னிலக்கணங் கூறுகின்றது. எதிர்மறைப் பொருளொன்றே யுடைய முழுதுமபாவமும், ஒன்றினொன்ற பாவமும், எதிர்மறைத் தன்மையை வரைந்து கொள்வதனை ஆரோபித்தலான் உளதாய சமுசர்க்கவேறுபாட்டால், பலவகையாம். அங்ஙனமாமாறு, 'சாத்தன் உளனாயினும் குழையுடைய சாத்தனிலன்' என்னுமுணர்ச்சி நிகழ்தலான் அடையடுத்ததனபாவம், 'ஒன்றுளதாயினும் இரண்டில்லை' என்னுமுணர்ச்சியான் இரண்டன்றன்மையான் வரைந்து கொள்ளப்பட்டதனபாவம், சையோக சம்பந்தத்தாற் குடமுடைய நிலத்துச் சமவாயி சம்பந்தத்தாற் குடமில்லை என்னுமபாவம் எனப் பலவாய் விரிதல் காண்க. குடமுடைய நிலத்து வெவ்வேறு வகைப்பட்ட குடங்களின்மையின், குடத்தன்மையான் வரைந்து கொள்ளப்படும் பிரதியோகியையுடைய பொதுவபாவம் வேறெனக் கொள்க. ஒன்றினொன்றபாவமும் இவ்வாறே காண்க. 'குடத்தன்மையான் வரைந்து கொள்ளப்படும் ஆடையில்லை' என வேற்றுநிலைக்களத்துளதாய தன்மையான் வரைந்துகொள்ளப்பட்டதனபாவம் வேறு கொளற்பாற்றன்று, ஆடையிற் குடத்தன்மை இல்லையென்பதே அதன் பொருளாகலின். வேறெனக் கொள்ளின், கேவலாந்நுவயியாம். காலவிசேடத்தின் உணரப்படும் அபாவம் முழுதுமபாவமே, வேறன்றென்க. குடமில்லாத நிலத்துக் குடங்கொணர்ந்துழி முழுதுமபாவம் வேறிடத்துச் சேறவில்லா வழியும் உணர்ச்சி நிகழாமையின், குடங்கொண்டு போயபின்னர் உணர்ச்சி நிகழ்தலின், நிலத்திற்குங் குடத்திற்கும் உள்ள

சையோகத்தின் முன்னபாவமும் அழிவுபாட்டபாவமும் முழுதுமபாவ உணர்ச்சியை நிலைபெறுத்துவதெனக் கொள்ளற்பாற்று. அதனானே குடமுடைய நிலத்து அதன்சையோகத்தின் முன்னபாவமும் அழிவுபாட்டபாவமும் இன்மையின் முழுதுமபாவத்தினுணர்ச்சி நிகழாதெனவும், குடங்கொண்டு போயவழி அதன் சையோகத்தின் அழிவுபாடுண்மையின் அதனுணர்ச்சி நிகழ்வதெனவும், கொள்க. வேறுநிலைக்களமாதலானே 'இல்லை' என்னும் வழக்கம் நிகழ்தல் கூடுமாகலின், அபாவம் வேறுபதார்த்தமன்றென்பது குருமதம். அது பொருந்தாது. அபாவங்கொள்ளாக்கால் 'வெறிது இன்னது' எனப் பொருள் கூறமாட்டாமையின். இல்லதனபாவமாவது அபாவமே, வேறன்று, வேறெனக் கொள்ளின் வரம்பின்றியோடுமாகலின். அழிவுபாட்டின் முன்னபாவமும் முன்னபாவத்தினழிவும் தத்தமெதிர்மறைப் பொருளே, வேறல்லவெனக் கொள்க. இல்லதனபாவம் வேறொன்றே, மூன்றுமபாவம் முந்திய அபாவமாகலின், வரபின்றியோடு மாறில்லையென்பர் நவீனர்.

100. எல்லாப்பதார்த்தங்களும் முறையானே கூறியவற்றுள் அடங்குதலின், பதப்பொருள்கள் ஏழென்பது பெற்றாம்.

எல்லாப் பதார்த்தங்களும். எ-து. பிரமாணம், பிரமேயம், ஐயம், பிரயோசனம், திருட்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தர்க்கம், நிண்ணயம், வாதம், செற்பம், விதண்டை, ஏதுப்போலி, சலம், சாதி, தோல்வித்தானம் என்பவற்றின் உண்மையறிவால் வீடடைதல் உளதாமென நியாய நூலிற் பதினாறு பதார்த்தங் கூறுதலான், ஏழென்றதென்னை யென்னுங் கடாவிற்கு விடை கூறுகின்றது. எல்லாப் பதார்த்தங்களும் எழனுள் அடங்குமென்றவாறு. ஆன்மா, சரீரம், இந்திரியம், அருத்தம், புத்தி, மனம், பிரவிருத்தி, தோடம், பிரேத்தியபாவம், பலம், துக்கம், அபவர்க்கம் எனப் பிரமேயம் பன்னிருவகைத்து. பிரமேயம் பிரமாணத்தால் அளக்கற்பாலதென்றவாறு. பிரவிருத்தி தன்மாதன்மங்கள். தோடம் விருப்பு வெறுப்பு மயக்கங்கள். விருப்பு

காமம். வெறுப்பு வெகுளி. மயக்கம் சரீர முதலியவற்றை ஆன்மாவென மருளுதல். பிரேத்தியபாவம் சாக்காடு. பலம் போகம். அபவர்க்கம் வீடுபேறு. அது தன்னிலைக்களத்துளதாகிய துன்பத்தின் முன்னபாவத்தோடு ஒருங்கு நில்லாத துன்பத்தினழிவுபாடு. பிரயோசனம் சுகமும், துக்கக்கேடும். திருட்டாந்தம் அடுக்களை முதலியன. சித்தாந்தம் பிரமாணமுடையதென உடன்பட்டது. நிண்ணயம் நிச்சயித்தல். அது பிரமாணத்திற்குப் பயன். வாதம் உண்மையுணர்தல் வேட்கையோன் கதை. செற்பம் சாதனமிரண்டுள்ள தன்கண் வெல்லும் வேட்கையுடையான் கதை. விதண்டை தன் கோட்பாட்டை நிலைபெறுத்தாத கதை. கதையாவது கூறுவார் பலரை யுடைத்தாய்ச் சங்கையுத்தரங்களைப் பயக்குந் தொடர்மொழியின் கோவைப்பாடு. சலம் ஒரு கருத்துப்பற்றிக் கூறிய மொழிக்கு வேறு பொருள் படைத்திட்டுக்கொண்டு பழித்தல். சாதி போலியுத்தரம். அது பொதுவியல்பு, வேற்றியல்பு, உயர்ச்சி, தாழ்ச்சி, புகழ்ந்துரை, பழித்துரை, விகற்பம், சாத்தியம், அடைவு, அடையாமை, பிரசங்கம், வேறு திருட்டாந்தம், உற்பத்தியின்மை, ஐயம், பிரகரணம், ஏதுவின்மை, அருத்தாபத்தி, விசேடமின்மை, உபலத்தி, அனுபலத்தி, காரணம், நித்தம், அநித்தம், காரியம் சமமாதலென்க. தோல்வித்தானம் வாதம் பேசுவார் தோல்வியுறுதற்கேது. அவை மேற்கோளழிவு, வேறு மேற்கோள், மேற்கோண் மாறுபாடு, மேற்கோன் விடுதல், வேற்றேது, வேற்றுப் பொருள், பொருளின்மை, பொருளுணரப்படாமை, பொருட்போலி, காலம் பெறாமை, குன்றக் கூறல், மிகைபடக் கூறல், கூறியதுகூறல், பிற்கூற்றின்மை, அறியாமை, மறுக்கப்படாதமதத்தை யுடன்பட்டுக் கூறல், உடன்படற்பாலதனையவாவுதல், உடன்படற்பாலதல்லதனையுடன்படுதல், சித்தாந்தப் போலி, ஏதுப்போலி என்பனவாம். ஏனையவை வெளிப்படை.

அற்றேல், பதார்த்தம் ஏழென்றதென்னை? கைத்தலத்தின் நெருப்பேந்திய வழியும் தடையுண்டாயிற் சூடு பிறவாமைகாண்டலின் ஆற்றல் வேறு பதார்த்தமாலோவெனின் ;— அற்றன்று, தடையினபாவம் காரியமெவற்றிற்குங் காரணமாகலான் ஆற்றல்

உடன்பாடன்மையின், காரணமாதற்றன்மையே ஆற்றலென்னும் பதார்த்தமாகலி னென்க. அற்றாயினும், சாம்பர் முதலியவற்றானே வெண்கல முதலியவற்றிற் றூய்மை பிறத்தல் காண்டலின், சார்புபற்றிய ஆற்றல் கொள்ளற்பாற்றெனின் ;— அற்றன்று, தூய்மையென்னும் பதார்த்தமாவது சாம்பர் முதலியன கூடுங்காலத்து ஒருங்கு நிற்பதாகிய தீண்டற்பாலதல்லதனைத் தீண்டுதலாகிய வாலாமைவை எதிர்மறையாக வுடைய அபாவமெல்லாவற்றோடும் உடனிகழும் சாம்பர் முதலியவற்றின் அழிவுபாடேயாகலின். உடைய பொருண்மையும் வேறு பதார்த்தமன்று, வேண்டியவாறே ஏவப்படுதற்றகுதியே உடைய பொருண்மை யென்னும் பதார்த்தமாகலின். உடைய பொருண்மையை வரைந்துகொள்வது ஏற்றல் விலைகொடுத்தல் முதலியவற்றாற் கொள்ளப்படுந் தன்மை.

இனி விதி இன்னதெனத் தெரிக்குமாறு :— விதியாவது முயற்சியைப் பிறப்பிப்பதாகிய இச்சையைத் தோற்றுவிக்கும் ஞானத்திற்கு விடயமாயுள்ளது. அவ்விதியை உணர்த்துவது வியங்கோள் விகுதி முதலியன. தொழின் முற்றுப்பெறாததன்கண் முயறல் செல்லாமையின், தொழில் முற்றுப்பெறுமென்னும் உணர்வு முயறலை நிகழ்த்துவது. அற்றேல், நஞ்சுண்டல் முதலியவற்றினும் முயற்சி செல்லற்பாற்றெனின் :— அற்றன்று, காமிய விதிக்கண் விழையப்படுதற்குக் கருவிததன்மையாகிய இலிங்கமுடைய தொழில் முற்றுப்பெறுமென்னு ஞானமும், நித்தவிதிக்கண் விதித்த காலத்து நிகழற்பாற்று என்னு ஞானமும், நைமித்திகத்தின்கண் நிமித்தவுணர்வாற் றோன்றும் ஞானமுமே முயறலைத் தோற்றுவிப்பதாகலின். குருமதத்தார் விசேடணத்தையுடைய தன்றன்மையின் நினைவாற் றோன்று ஞானம் உடனிகழுமாகலான், உடனிகழ்ச்சி யுண்டென்பர். அது பொருந்தாது, தொழிலான் முற்றுப்பெறும் விழையப் படுவதற்கேதுவை உணருஞானமே இச்சை வாயிலாக முயற்சியைப் பிறப்பிக்குமெனச் சுருங்கக் காட்டலாற் கொள்ளறபாற்றாகலின். அற்றேல், நித்தவிதி விழையப்படும் பலத்துக்குக் கருவியன்மையின், ஆண்டு முயற்சி செல்லாமை வரப்பெறுமெனின் ;— அற்றன்று, நித்த

விதிக் கண்ணும் விதித்தன செய்யாமையான் வருங் குற்றங்களை தலாதல் பாவக்கேடாதல் பலமெனக் கொள்ளற்பாற்றாகலின். இதனானே தொழிலான் முற்றுப்பெறும் விழையப்படுதற்கேதுவாதற் றன்மையே வியங்கோள் விகுதிக்குப் பொருளெனக் கொள்க. அற்றேல், "துறக்கம் விழைவோன் சோதிட்டோமத்தான் வேட்க" என்புழிக் ககர விகுதியாற் றுறக்கத்திற்கேதுவாகிய காரிய நிகழ்ச்சி உணரப்படும். அக்காரியம் வேள்வியெனின் அது விரையக் கெடுவதாகலான் எதிர்காலத்தின் வரக்கடவதாய துறக்கத்திற்கேதுவாதல் கூடாமையின், அதற்குத் தகுதியாகிய நிலைபெற்ற காரியமாகிய அபூர்வமே விகுதிப்பொருளெனக் கோடற்பாற்று. காரியம் செய்கையான் முற்றுப்பெறும். செய்கை செயப்படுபொருளுடைத்தாகலால் 'செயப்படுபொருள் யாது' என்னும் அவாய்நிலைக்கண் வேட்டல் செயப்படுபொருளாய் முடிவு பெறும். 'எவனுடைய காரியம்' என ஏவப்படுவானவாயய் நிலைக்கண் 'துறக்கம் விழைவோன்' என்னும் பதம், ஏவப்படுவான்மேற்றாய் முடிவுபெறும். ஏவப்படுவான் காரியம் புந்திசெய்வான். அதனானே சோதிட்டோமமெனப் பெயரிய யாகமாகிய செயப்படுபொருள் துறக்கம் விழைவோனாற் செயற்பாலதென வாக்கியப் பொருள் முடிவுபெறும். இவ்விகுதி வேதத்தின்கண்ணதாகலின், "சாங்காறும் எரியோம்புக" என்னும் நித்தியவிதி வாக்கியத்தினும் அபூர்வமே சொற்குப் பொருளாகக் கோடற்பாற்று. "பிணியின்மை விழைவோன் மருந்து தின்னுக" எனவும், உலகத்தின்கண்ணதாகிய வியங்கோள் விகுதிக்கு இலக்கணையாற் றொழிற்காரியமே பொருளெனக் கோடற்பாற்றெனின்;— அற்றன்று, யாகத்தின்கண்ணும் தகுதியின்றெனத் தெளிவு பெறாமையின் ஏதுவே விகுதிப் பொருளாக உணர்ந்த பின்னர் உறுதிப்பொருட்டு அவாந்தரவியாபாரமாக அபூர்வங்கோடற் பாற்றாகலின். "புகழ்ந்தெடுத்துரைத்தலாற் கெட்டது" என்னுஞ் சுருதியானு முணர்க. வேள்வியினழிவுபாடு வியாபாரமன்று. உலகின்கட் சொற்பொருளுணர்ச்சிவலியான் வினைமுற்றின்கண்ணே வியங்கோளானுணர்த்தப்படுவது செய்கையான் முற்றுப் பெறுவதாய் விழையப்படுவதற்கு ஏதுவாயுள்ளதேயாமாகலின், வியங்கோட்டன்மையான் விதிப்

பொருண்மையும், விகுதித்தன்மையான் முயற்சிப் பொருண்மையுமுடைத்து. 'அடுகின்றான்' அடுதலைச் செய்கின்றான் என்னும் பொருடோன்றக் காண்டலானும், 'யாது செய்கின்றான்' என்னுங் கடாவின்கண் 'அடுக்கின்றான்' என இறை நிகழ்தலானும், முயலுதலே விகுதிக்குப் பொருளாதல் தெளியப்பட்டமையானென்பது. 'தேர் நடக்கின்றது' என்றற் றொடக்கத்தின் இலக்கணையான் அதற்கனுகூலமான புடைபெயர்ச்சி பொருள். 'சாத்தனடுகின்றான்' 'சாத்தனால் அரிசியடப்படுகின்றது' என்றற் றொடக்கத்தின்கண் வினைமுதலும் செயப்படு பொருளும் விகுதிக்குப் பொருளல்ல, அவற்றின் ஒருமை முதலிய எண்களே பொருளென்க. வினைமுதலும் செயப்படு பொருளும் அவற்றை ஆசங்கித்தலாற் பெறுதும். 'கைகண்டேன்' என்புழித் தெளியக் கண்டேன் எனத் தெளிவின்கட் பகுதிக்கே ஆற்றல். உபசர்க்கங்கள் அவற்றை விளக்குதன் மாத்திரமே, அவற்றின்கண் ஆற்றலின்றென்க.

பதார்த்த வுணர்விற்கு வீடுபேறே மேலாயவுறுதிப் பயன். "முந்திய வொருமையாலே மொழிந்தவை கேட்டல் கேட்ட — சிந்தனை செய்த லுண்மை தெளிந்திட லதுதானாக—வந்தவா றெய்த லிட்டை மருவுத லென்று நான்கா—மிந்தவா றடைந்தோர் முத்தி யெய்திய வியல்பினோரே" என்னுஞ் சுருதியாற் கேள்வி முதலாயின முத்தித் தோற்றத்திற்கு ஏதுவாதல் கூறுதலின், கேள்வியான் உடம்பு முதலியவற்றிற்கு வேறாய ஆன்மா உண்டென்றுணர்ந்துழியும் ஐயநீங்குதல் உத்தியாற்பலகாற் பயிறலாகிய சிந்தனையாற் பெறற்பாலதாகலின், சிந்தனையைப் பிறப்பிப்பதாகிய பதார்த்தங்களினுண்மை தெரித்தலாற்சுருதியின்றிச் சாத்திரமும் முத்தியைப் பயப்பிப்பதேயாம். சிந்தனை செய்தபின்னர்ச் சுருதியான் உபதேசிக்கப்படும் யோக விதியால் தெளிதல் நிகழ்ந்துழி அதன் பின்னர் உடம்பு முதலியவற்றிற்கு வேறாய ஆன்மாவைப் புலப்படக் காணும். காணவே, உடம்பு முதலியவற்றை யானென்னும் செருக்காகிய மயக்கவுணர்வு கெடும். கெடவே, குற்றமின்மையின், முயறலின்றாம். ஆகவே, அறம் பாவங்கள் நிகழாமையிற் பிறவி நீங்கும். பிறவி நீங்குழி, முன்னர்ச்

செய்துகொண்ட அறம் பாவங்கள் அனுபவத்தா னீங்கும். நீங்கவே, இறுதித் துன்பத்தினழிவுபாட்டை இலக்கணமாகும். நீங்கவே, இறுதித் துன்பத்தினழிவு பாட்டை இலக்கணமாக வுடைய வீடுபேறுண்டாம். வீடுபேற்றிற்கேது ஞானமே. மயக்க வுணர்வு நீங்குதல் ஞானமாத்திரத்தாற் றோன்றும், "ஞானத் தால் வீடென்றே" எனத் தேற்றேகாரத்தால் ஏனையேதுக்கள் அதுவல்லவென விலக்குதலின். அற்றேல், "சன்மார்க்கஞ் சக மார்க்கஞ் சற்புத்திர மார்க்கந் தாதமார்க்கமென்று சங்கரனை யடையு—நன்மார்க்க நான்கு" என வீடுபேற்றிற்கு நான்குங் காரணமென்றலின், ஞானங் கருமமென்னும் இரண்டுங் கூடியே வீடுபேற்றிற்குக் காரணமாமாலெனின்;—அற்றன்று, ஈண்டுச் சரியை கிரியா யோகங்களைச் செய்துழி நன்னெறியாகிய ஞானத் தைக் காட்டியல்லது மோக்கத்தைக் கொடா வென்றும், "சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடி யைச் சேர்வர்" என்றும், "கிரியையென மருவுமவை யாவு ஞா னங் கிடைத்தற்கு நிமித்தம்" என்றும் கருமமனைத்தும் ஞானத் திற்கு ஏதுவாகக் கூறுதலின், கருமமனைத்தும் ஞானம் வாயி லாக வீடுபேற்றிற்குக் காரணமாவதல்லது நேரே காரணமன் றென்பதாம். ஆகலே, பதார்த்த வுணர்வானே வீடுபேறாகிய மேலாமுறுதிப்பயன் கிடைத்தல் பெற்றாம்.

தருக்கசங்கிரகமும்

அதனுரையாகிய

தருக்கசங்கிரக தீபிகையும்

முற்றுப் பெற்றன




Arumuga Navalar
Press
300 Mint St.
Madras 1